Free Circulation Germany- England

மணி: 73 - ஓசை: 322 ஆடி. July. 2023

# வெற்றிமணி

Vettimaniy

ESTD 1950

29TH years IN EUROPE Successful Publishing

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

Orientalisch Textilien & Schmuck

33 ஆவது ஆண்டு நிறைவு

தரமும், மலிவும், ஒரே இடத்தில்

Königswall 16 (Am Hbf) 44137 Dortmund

Tel:0231 162377

# இரண்டாவது கல்லிலும் இரண்டு மாங்காய்கள்?

## ரணிலின் வியூகம் வெற்றி தருமா?

இலங்கையில் இருந்து ஆர்.பாரதி

## கூத்தப் பெரியோன் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களின் அமுத விழா





## அடங்க மறுத்தவள் ஆடும் கூத்து

## பூந்திலட்டும் புத்தகங்களும்

## இறக்கை கட்டிப் பறக்குதடீ








# பூந்திலட்டும், புத்தகங்களும்



தீபாவளி மலிவு விற்பனைக் காலத்தில் ஒரு குறித்த விலைகளுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு தமிழ் நாட்டில் போத்தீஸ் புடவைக்கடையில் லட்டு பெட்டிகளை இலவசமாக வழங்குவார்கள்.

வாடிக்கையாளர்கள் வரிசைகட்டி நின்று அவர்கள் வாங்கிய சேலைகளின் பெறுமதிக்கு ஏற்ப பெட்டி, பெட்டியாக லட்டுகளை அடுக்கிச் செல்வார்கள்.

பூந்திலட்டு யாருக்குத்தான் விருப்பமில்லை. எனவே வரிசை கட்டி நின்றுதான் ஆகவேண்டும். இன்றைய வாழ்வில் உணவினை மட்டும்தான் கைத்தொலைபேசியில் நக்கி நக்கி உண்ண முடியாது. மற்ற எதுவானாலும், பார்க்கலாம், வாசிக்கலாம். புத்தகக் கடைக்கு கூட இப்போது பலர் செல்வது குறைவு, ‘புத்தகத்தை எங்கு வைப்பது, அங்கு அறை எல்லாம் தாத்தா பாட்டிமார் அள்ளிக்கட்டி வச்சிருக்கிறார்கள். அவர்கள் கட்டையில் போனால்த்தான் அந்த புத்தக கட்டுகளை விட்டு வீசலாம்’. இந்த மன நிலையில் பலர் உலகில் உலாவும் போது போத்தீஸில் ஒரு அதிசயம்!.

கடந்த ஆனிமாதம் அந்த கடைக்கு நான் சென்ற போது முன்பு தீபாவளி தள்ளுபடிக்கு பொருட்கள் வாங்க வந்தவர்கள் லட்டுக்கு வரிசைகட்டி நின்ற இடத்தில் இப்போதும் வரிசை நீண்டு இருக்க, ‘என்ன ஆனி மாதத்திலும் லட்டு கொடுக்கிறார்களா..’ என எட்டிப்பார்த்தேன்.

அங்கே ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் கொள்வனவு செய்தவர்களது பணத்திற்கு ஏற்ப புத்தகங்களை அன்பளிப்பு செய்துகொண்டு இருந்தார்கள். 1000 ரூபாய் வரை ஒரு தொகுதி புத்தகங்கள், 2000 கு மேல், 5000 கு மேல், 15000 கு மேல் இப்படி பல தொகுதி புத்தகங்கள் தரவரிசையில் இருந்தன. 15000 ரூபாய்க்கு மேல் வாங்கியவர் 1000 ரூபாய்க்குள் வாங்கியவர் தொகுதியிலும் புத்தகங்களை அவரவர் விருப்புக்கேற்ப பெற்றுச் சென்றனர்.



நான் அங்குள்ள முகாமையாளர்களை அணுகி பார்க்க சந்தோஷமாக உள்ளது; லட்டுக்கு எப்படி வரிசைகட்டி நின்று வேண்டினார்களோ, அதேபோல் புத்தகத்திற்கும் நிற்கிறார்கள், பார்க்க மகிழ்ச்சியாக உள்ளது தமிழ் நாட்டில் வாசிப்புத் தன்மை குறையவில்லை என்றேன்.

அவர் சிரித்துக்கொண்டே சொன்னார் லட்டு அதில் ஒரு லட்டும் வீண்போயிராது, உடனே பெட்டி உடைக்கப்பட்டு முடிந்திருக்கும். ஆனால் புத்தகம் எடுப்பவர்கள் எல்லோரும் அதனை படிக்க மாட்டார்கள், எங்கோ ஒரு சிலர் படிப்பார்கள். அந்த ஒரு சிலரால் தமிழ் வாழ்ந்தாலும் மகிழ்ச்சியே என்றார்.

மேலும் அவர் தொடர்ந்தார் அது மட்டுமல்ல



மாதவி

28 ஆம் பக்கம் பார்க்க...





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 322



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)



பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276


# இரண்டாவது கல்லிலும் இரண்டு மாங்காய்கள்?

## ரணிலின் வியூகம் வெற்றி தருமா?



இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி

பிரான்சுக்கும் பிரித்தானியாவுக்குமான விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்னதாக முக்கியமான சில காய் நகா்த்தல்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டிருக்கின்றார். இதனைவிட, இந்தியாவுக்கும் ஜுலை மூன்றாவது வாரத்தில் அவர் செல்லவிருக்கின்றார். இந்த விஜயங்களின் போது நிலைமைகளை தமக்கு சாதகமாக்குவதற்காக அவர் எவ்வாறான உபாயத்துடன் செயற்பட்டுள்ளார் என்பதை இந்த மாதம் பார்ப்போம்.

முதலாவதாக, வடக்கு கிழக்குக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்த தான் தயாராக இருப்பதாக அறிவித்திருக்கின்றார். ஏதோ ஒரு தீர்வுக்கு தான் தயார் என்பதை உதவி வழங்கும் நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் காட்டிக்கொள்வது இதன் நோக்கம். நீதியரசர் விக்னேஸ்வரன் இதனை ஆதரிக்க, ஏனைய கட்சிகள் அதனை எதிர்க்க தமிழ்க் கட்சிகளிடையிலான பிளவையும் தீவிரப்படுத்தியிருக்கின்றார். அதாவது, ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள்.

இரண்டாவது நகர்வாக தமிழ் பௌத்தம் தொடா்பாகப் பேசியிருக்கின்றார். தொல்லியல் திணைக்களத்தின் ஆதரவுடன், வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ்ப் பௌத்தம் என்று ஒன்றே இருக்கவில்லை, சிங்கள பௌத்தம் மட்டுமே இருந்துள்ளது என நிறுவுதற்கு சிங்களப் பேரினவாதிகள் முழு முனைப்புடன் செயற்பட்டுவரும் நிலையில், ஜனாதிபதி, தமிழ் பௌத்தம் குறித்து தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் பேராசிரியர் அனுரா மனதுங்கவுக்கு விளக்கம் கொடுத்திருக்கின்றார்.

தமிழ் எம்.பி.க்களுடனான சந்திப்பு ஒன்றின் போதுதான் இது தொடா்பாக அவர் கருத்து வெளியிட்டார். இது குறித்த தகவல்கள் உடனடியாக வெளியாகாத போதிலும், சில தினங்களில் ஜனாதிபதி தரப்பிலிருந்து



கசிய விடப்பட்ட வீடியோ அனைத்தையும் அம்பலப்படுத்தியது.

நீங்கள் எனக்கு வரலாறு கற்றுக் கொடுக்கிறீர்களா? அல்லது உங்களுக்கு நான் வரலாற்றைக் கற்றுத் தரவா? என்று ஜனாதிபதி கடும் தொனியில் தொல்பொருள் பணிப்பாளருக்கு வகுப்பெடுக்கும் காட்சி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அந்தக் காணொளி வைரலாக பரவியது.



சமூக ஊடகங்களில் அதனைப் பார்த்த சிங்கள மக்கள் அதிர்ச்சியடைந்தார்கள். சில மணி நேரங்களிலேயே பணிப்பாளர் மனதுங்க ராஜினாமா கடிதத்தை அனுப்பினார். ஜனாதிபதி இதனை அதனைத்தான் எதிர்பார்த்தார்.

அன்றைய கூட்டத்தில் ரணில் தெரிவித்த கருத்துக்களில் இரண்டு விடயங்கள் கவனத்தைப் பெறுகின்றன. முதலாவது, தொல்பொருள் திணைக்களம் காணிகளைப் பெருமளவுக்கு கையகப்படுத்தி அவை தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்தவை எனக் குறிப்பிட்டு அவற்றில் விகாரைகளை அமைப்பதற்கு எதிராக அவர் குரல் கொடுத்திருக்கின்றார். அல்லது உத்தரவு பிறப்பித்திருக்கின்றார். இரண்டாவது – தமிழ் பௌத்தம் தொடர்பாக முதல் தடவையாகப் பேசியிருக்கின்றார். அதாவது, தமிழ் பௌத்தம் இருந்துள்ளது என்பது வரலாற்றில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்ற கருத்தை அவர் வெளியிட்டார்.

தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் என தொல்லியல் திணைக்களம் கண்டுபிடிக்கிற இடங்களை பொறுப்பெடுத்து பாதுகாக்காமல், அவற்றை பௌத்த பிக்குகளிடம் ஒப்படைக்கிறது.

29 ஆம் பக்கம் பார்க்க...




கதை



# மாவிட்டபுரத்தான் வந்திட்டானோ?

பாலன் வீட்டிற்கு முன்பாகவுள்ள வீதியில், கடந்த இரண்டு நாட்களாக ஒரு கார் நத்தை போல ஊர்ந்து திரிந்தது. சில வேளைகளில் அவன் வீட்டிற்கு நேர் எதிராக, வீதியின் எதிர்ப்புறத்தில் அந்தக் கார் முகாமிட்டிருந்தது.

பாலன் வேலை முடித்து வீடு வந்து காரைத் தரிப்பிடத்தில் நிற்பாட்டும்போது, எதிர்வீட்டுக்காரன் ஓடி வந்தான்.

அந்தக் காருக்குள்ளையிருந்து ஒருத்தன் நெடுகலும் உங்கட வீட்டைப் பாத்தபடி இருக்கிறதைக் கண்டனான்" எதிரே நின்ற அந்தக் காரைச் சுற்றிக்காட்டிபடியே பாலனிடம் அவன் சொன்னான்.

இருவரும் அந்தக் கார் நிற்குமிடம் நோக்கிச் சென்றார்கள். காரிற்குள் ஒருவரும் இருக்கவில்லை. அயல்வீட்டுக்காரன் காரைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டான். பின் தன் இரண்டு கைகளையும் கார்க்கண்ணாடி மீது வட்டமாகக் குவித்து உள்ளே உற்று நோக்கினான். இங்கே பார் “கமரா ஒண்டு உன்ர வீட்டை நோக்கியபடி வைக்கப்பட்டிருக்கு... உது பொலிஸ் வாகனம் போலத்தான் கிடக்கு" தன் சந்தேகத்தைச் சொன்னான் அவன்.

பாலன் பயந்து போய்விட்டான்.

வீட்டுக்குள்ளை மனிசியும் பிறந்த குழந்தையும் இருக்கினம். ஏதாவதெண்டா

**சுருதி (அவுஸ்திரேலியா)**

வீட்டின்ரை கதவைத் தட்டி மனிசியை விசாரிச்சிருக்கலாம் தானே! உதென்ன விசர்த்தனமான வேலை" பாலன் விசனப்பட்டான். ஏதாவது தேவைப்பட்டா வருவன் தானே!" என்றான் அயல்வீட்டுக்காரன்.

மறுநாள் காலை பாலன் வேலைக்குப் புறப்படும்போதும் அந்தக் கார் நின்றிருந்தது. காலை பதினொரு மணியளவில் பாலனின் மனைவி, பாலனுக்கு ரெலிபோன் செய்தாள். பொலிஸ் ஸ்ரேஷனிலை வந்து சந்திக்கச் சொல்லி ஒரு துண்டு தபால்பெட்டிக்குள்ளை கிடக்கப்பா."

ஆத்துப்பறந்து அரைநாள் லீவு எடுத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான் பாலன். மனைவி கைக்குழந்தையையும் தூக்கிக் கொண்டு தானும் பொலிஷ் ஸ்ரேஷன் வருவேன் என அடம்பிடித்தாள். குழந்தையோடை வந்தா பொலிஸ் ஒண்டும் செய்யான்களப்பா"

அவுஸ்திரேலியாவிலை உந்த விளையாட்டு ஒண்டும் சரிவராது! என்ன ஏதெண்டு



தெரியாமல் ஏன் பயப்படுறீர்? நான் மாத்திரம் போட்டு வாறன்."

பொலிஸ் ஸ்ரேஷனுக்குப் புறப்பட்டான் பாலன்.

செல்லம்மா எண்டது யார்?" பொலிஸ் ஸ்ரேஷனில் நின்றவன் கேட்டான்.

அவ என்னுடைய அம்மா"

அம்மா ஏதேனும் பிஸ்னஸ் செய்யிறவாவோ?"

அம்மா கோயிலே கதியெண்டு இருக்கிறவா. பூ மாத்திரம் கோயிலுக்குக் கொண்டுபோய் குடுப்பா"

உம்முடைய பெயருக்கு ஒரு பார்சல் அவா அனுப்பியிருக்கிறா. எங்களுக்கு சந்தேகமாக் கிடக்கு." உள்ளே சென்ற அவன் கையிற்கு கிளவ்ஸ் அணிந்து ஒரு பொதியை எடுத்து வந்தான்.

இதைப்பற்றி ஏதாவது தெரியுமா?"

இல்லை சேர்"

இதின்ரை பெறுமதி என்ன எண்டு தெரியுமா? இண்டையில் விலைக்கு இதை வித்தா, அவுஸ்திரேலியாவிலை பத்து வீடுகள் வாங்கலாம். அறுநூற்றி இருபது கிராம் இருக்கு" பாலன் அதிர்ச்சியடைந்தான். அந்தப் பார்சலைத் தொடுவதற்கு முயற்சித்தான். தொடாதே!" என்று கத்தினான் பொலிஸ்காரன்.

உதுக்குள்ளை திருநீறுதான் இருக்க வேணும். ஹோலி ஆஷ்"

அதை நாங்கள் தான் முடிவு செய்யவேணும். சாம்பிள் எடுத்து பகுப்பாய்வு செய்ய அனுப்பியிருக்கிறோம். றிசல்ற் வந்தவுடனை கூப்பிடுவோம். நீர் சொல்லுறமாதிரி ஹோலி ஆஷா இருந்தா குப்பைத்தொட்டிக்கு, பவுடரா இருந்தா எங்களுக்கு."

பொலிஸ் ஸ்ரேஷனில் இருந்து வீட்டுக்கு வந்த பாலன் அம்மாவிற்கு தொலைபேசி எடுத்தான். மறுமுனையில்,

அட என்ரை குஞ்சு மாவிட்டபுரத்தான் வந்திட்டானோ? நிறையவா அனுப்பியிருக்கிறன். குழந்தை வளர வளர வைச்சு வைச்சுப் பூசு" என்றார் அம்மா.



# சிறுவர்களுக்கான இன்சுலின் மருந்து கோள்வனவுக்கு நிதி

யாழ்ப்பாணம் போதனா வைதியசாலை நீரிழிவுச் சிகிச்சை நிலையதில் நீரிழிவு நோய் வகை ஒன்றுக்கு சிகிச்சை பெற்று வரும் சிறுவர்களுக்கான இன்சுலின் ஊசி மருந்து கொள்வனவுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். நீரிழிவுக் கழகத்தினரின் கோரிக்கைக்கு அமைவாக ஜேர்மனியைச் சேர்ந்த துரைசிங்கம் மோகனதாஸ் ஒரு இலட்சம் ரூபாவும், இலண்டனைச் சேர்ந்த எம்.எம். குடும்பத்தினர் அறுபதாயிரம் ரூபாவும் வழங்கியுள்ளனர்.

இந்நிதியை ஜேர்மன் வெற்றிமணி பத்திரிகை நிறுவனத் தலைவர் எஸ்.சிக்குமார் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தியிடம் கையளித்தார்.









காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

# எங்கடை ஆச்சி



## இப்பத்தே பெடிபெட்டையள் கனபேருக்கு ஈச்சம் பழம்! இப்படி ஒரு பழங்கள் இருக்கேண்ட சங்கதியே தெரியாது

இப்பதான் கிட்டத்திலை ஈச்சம் பழக் காலம் முடிஞ்சது. ஈச்சம் பழக் காலம் எண்டதுந்தான் எங்கட கடக்கரை வழியை கடக்கரை பனந்தோட்டம் வழியை உந்த ஈச்ச மரப் பத்தைகள் நிறைய நிண்டது ஞாபகம் வருகுது . உப்பிடி உந்த ஈச்ச மரம் உப்புக்காத்து வீசிற களர் நிலத்திலைதான் நல்லாமதாளிச்சு வளரும் எண்டதை “களர் வளர் ஈந்தின் காழ் கண்டு அன்ன” (பெரும் 130) பெரும்பாணாற்றுப் படை சொல்லுது எண்டு ஆச்சி சொல்லுறவ. உந்த ஈச்சம் காயள் பங்குனி சித்திரை மாசத்திலை காச்சு நல்ல சிவப்பு சிவப்பு மணியள் மாதிரி பொளிச்சுப் பொளிச்சு எண்டு வெய்யிலிலை மினுங்கும் . உப்பிடி உந்தக் காயள் சிவப்புச் சிவப்பா இருக்கிறதை அகநானூறு “செம் காய் உதிர்ந்த பைம் குலை ஈந்தின்” (அகம் 21/20 ) எண்டு சொல்லுது எண்டு அப்பு சொல்லுறவர் . அதுமாதிரி உந்த ஈச்சம் காயள் குலை குலையா இருக்கிறதைப் பாக்க நல்ல வடிவா இருக்கும் . உப்பிடி உந்த ஈச்சங்காயள் குலை குலையா இருக்கிறதை “கற்றை ஈந்தின் முற்று குலை அன்ன” (நற் 174/1) எண்டு நற்றிணை சொல்லுது எண்டுவா ஆச்சி .

நாங்கள் முந்தி சின்னப் பெடியளா இருக்கேக்கை உந்த ஈச்சம் குலையளை வெட்டியந்து உப்புத்தண்ணி தெளிச்சு வைக்கல் பட்டறையுக்கை வைப்பம் இல்லாட்டில் சாக்குக்கை மூடிக் கட்டி வைப்பம். ரெண்டு மூண்டு நாளிலை நல்ல கன்னங்கரேல் எண்ட பழங்கள் வந்திருக்கும். உப்பிடி உந்த ஈச்சம் பழங்கள் கறுப்பா நல்ல சதைப்பிடிப்பா இருக்கிறதை “கரும் களி ஈந்தின் வெண் புற களரி” (நற் 126/2) எண்டு நற்றிணை சொல்லுது எண்டுவார் அப்பு . எங்கட ஆக்கள் சங்க காலத்திலை உந்த ஈச்சம் பழத்தை திண்டிருக்கிறாங்கள் எண்ட விஷயம் உதிலை இருந்து விளங்குது எண்டுவா ஆச்சி.



முந்தி நாங்கள் எங்கிகினேக்கையும் கொஞ்சம் காயள் முத்தட்டும் எண்டு பாத்து வைச்சுப்போட்டு வருவம் . பேந்து ரெண்டு மூண்டு நாட்கள் கழிச்சுப் போனம் எண்டால் ஆரும் அதுகளை வெட்டிக்கொண்டு போயிருப்பாங்கள். உதால நாங்கள் சில வேளை ஆவேசத்திலை ஆரும் வந்த வெட்டினாலும் எண்டு போட்டு கொஞ்சம் முத்தாத குலையளை வெட்டியந்து வைக்கல் பட்டறையுக்கை வைப்பம். பேந்து ரெண்டு மூண்டு நாட்கள் கழிச்சுப் பாத்தால் அதுகள் பழுக்காம சுருங்கி காஞ்சுபோன ஆட்டுப் புளுக்கை மாதிரி வந்திருக்கும் . பேந்தென்ன அள்ளிக்கொண்டே அடிவளவுக்கை கொட்ட வேண்டியதுதான் .முந்தி ஈச்சம் பழம் விக்கிறதை சிலர் தொழிலாச் செய்தவை . முக்கியமா பெண்டுகள்தான் செய்தவை அவை பள்ளிக்க வாசல்களிலை இல்லாட்டில் கோயில் வாசல்களிலை இல்லாட்டில் சாந்தி வழியை இருந்து விப்பினம். அப்பெல்லாம் ஒரு சுண்டு ஈச்சம்பழம் அம்பெசாம்.

சித்திரை வரியப்பிறப்பு அண்டைக்குத் தான் எங்கட வாரிவளவுப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா நடக்கும் . முத்லநாள் இரவு தேரைச் சோடிக்கேக்கை நாங்கள் நொங்கு, இளநி, வாழை, கமுகு, கரும்பு, உதுகளோடை உந்த ஈச்சம் பழக்குலையளையும் தேரில கட்டிச் சோடிப்பம் . உந்த ஈச்சம் பழத்திலை பொட்டாசியம், கால்சியம், பொஸ்பரஸ் இருக்கிறதாலை எலும்புத் தேய்மானத்துக்கு நல்லம் .அதோடை கண் பார்வைக்கு நல்லம். கண் புரை வந்தால் ஈச்சம் பழம் திண்டால டக்கெண்டு மாறும். பிள்ளைத்தாச்சியள் திண்டினம் எண்டால் வயித்திலை உள்ள குழந்தையளுக்கு பலவித்திலும்நல்லம்.அதோடநரம்புதளர்ச்சியால் பாதிக்கப்பட்டு தாம்பத்திய உறவில ஆர்வம் இல்லாத ஆம்பிளையளுக்கு , மலட்டு தன்மை உள்ள ஆம்பிளையளுக்கு நல்லம் எண்டு எங்கட பரியாரி துரைப்பெடி சொல்லு



றவர் எண்டு அப்பு சொல்லுவார் . நான் நினைக்கிறன் எங்கடை அப்பு ஆக்கள் அந்தக்காலத்திலை உந்த ஈச்சம் பழங்களை நல்லாத் திண்ட படியாலைதான் நல்ல உசாரான ஆம்பிளையளா இருந்தவை ஆச்சிமாரும் அவையுக்கை அடங்கிக்கிடக்கிறதே தங்கடை பொழுதெண்டு இருந்தவை .

முந்தி நாங்கள் காஞ்ச ஈச்ச மர இலைகளை வெட்டித் தடியளை எடுத்து பட்டம் கட்டிறனாங்கள் . சில இடங்களிலை கூடை எல்லாம் பின்னிறவை . எங்கட சில ஆக்கள் வேலிக் கதியாலை மாடாடுகள் காந்தாமல் இருக்க எண்டு போட்டு உந்த ஈச்சம் ஓலையளை வெட்டியந்து வேலிக்கு வைச்சுக் கட்டுவினம் . உப்பிடிக் கட்டேக்கை கவனமா இருக்க வேணும் ஈச்சம் இலை நுனியிலை இருக்கிற முள்ளுக் குத்திச்சுது எண்டால் அந்த இடம் காச்சுப்போகும். சில நேரம் ஈச்சம் குலை வெட்டப் போற ஆக்களுக்கும் உந்த ஈச்சம் முள்ளுக் குத்தி கைவழியை காயள் வரும்.

இப்ப எங்கடை கனசனம் நாகரீகம் எண்ட பெயரிலை உந்த ஈச்சம் பழம் மாதிரிப் பழங்களைத் தின்னிறதை விட்டுப்போட்டு அதுகும் உந்த வெளிநாட்டுக்காசு வந்த பிறகு கண்ட கறுமம் பிடிச்ச பழங்களையும் வாங்கித் திண்டு காசையும் கரியாக்கி நோய்காவியளாகவும் வந்திட்டிதுகள் .பேந்து டாக்குத்தர்மாருக்கு கொண்டு போய் காசைக் கொட்டுங்கள். இப்பத்தே பெடிபெட்டையள் கனபேருக்கு உப்படியான பழங்கள் இருக்கெண்ட சங்கதியே தெரியாது. உண்ணாண எங்கடை பாரம்பரியப் பழங்களை தின்னிறதாலை காசு கன வழியளிலை மிச்சமாகும் எண்டதோடை வாதை வருத்தம் இல்லாமலும் சீவிக்கலாம் கண்டியளோ. எண்டபடியாலை அதுகளின்ரை உற்பத்தியளை அதுகளின்ரை பாவனையளை என்னவிதப்பட்டும் நாங்கள் ஊக்குவிக்க வேணும் கண்டியளோ.





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


Luckyfly
Lucky Fly Reisebüro
Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171
2023
EARLY
BOOKING
OFFER
QATAR
என்றும் குறைந்த
விலையில்
உங்கள் பயணங்கள்
அமைய நாடுங்கள்.
e.mail: info@L-Fly.de | www.L-fly.de
SriLankan
QATAR
AIRWAYS
Emirates
Gulf Air
Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171
Essener Str.26 44793 Bochum-Germany



# ட்ராகூலா கதைகள் உண்மைதானா?

உருமேனிய மொழியில் "ட்ராகூல் " என்பதன் அர்த்தம் ரத்த வெறி பிடித்த சாத்தான் என்பதாம். ஆம். பதினைந்தாம் நூற்றாண்டில் கிழக்கு ஐரோப்பாவில் மக்களை சித்திரவதை செய்த ஒரு கொடுங்கோல் பிரபுவுக்கு மக்கள் "ட்ராகூலா" என பெயர் வைக்க , பின்னாளில் உலகெங்கிலும் இந்தப் பெயர் பரவி புகழ் பெற்றுவிட்டது என்பதே உண்மை. மத்தியகாலத்தில் இடைக்கால வாலாச்சியா என அழைக்கப்பட்ட (இன்றைய) ருமேனியாவில் ஆட்சியாளராக இருந்த "விளாட் டெப்ஸ் " என்பவரே அவரது கொடுங்கோல் ஆட்சியின் காரணமாக மக்களால் "விளாட் III டிராகுலா" என அழைக்கப்பட்டார் எனவும் ,விளாட் டெப்ஸின் மரணத்திற்குப் பிறகு, அவர் ஒரு காட்டேரியாக மாறியதாக மக்களிடையே ஒரு புராணக்கதை தோன்றியதாகவும் வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஜெர்மனியில் 1828இல் உருவாக்கப்பட்ட ட்ராகூலா நாடகத்திற்கு பின், 1897 ஆம் ஆண்டு "bram stoker" என்பவரது கற்பனை கலந்து எழுதப்பட்ட "ட்ராகூலா" புத்தகமானது உலகப் புகழ் பெற்றதுடன், இன்று வரையில் அந்த புத்தகத்தின் அடிப்படையில்தான் ட்ராகூலா திரைப்படங்களே எடுக்கப்படுகின்றன .

ட்ராகூலா எவ்வாறு தோற்றமளிக்கும் என்பது எழுத்தாளர்களது கற்பனை மட்டுமேயாகும். வெளிறிப்போன முகம், "ஜில் " என்ற குளிர்ந்த தேகம், நீண்ட கருப்பு அங்கி , கூர்மையான கோரை பற்கள், கதவுகள் தாழிட்டிருந்தால்கூட சாவித் துவாரம் வழியாக அறைக்குள் புகுந்துவிடுவது போன்ற அட்டை போன்ற உடல், நீல நிற விழிகள் (இதனால் தான் ஒரு காலத்தில் நீல நிற கண்களை கண்டு மக்கள் அஞ்சினார்களாம் ) போன்றவையே ட்ராகூலாக்களின் அடையாளமாக புத்தகங்களில் எழுதப்பட்டதுடன்

## ஒரு காலத்தில் நீல நிற கண்களை கண்டு மக்கள் அஞ்சினார்கள்!

திரைப்படங்களும் இயக்கப்பட்டது. ஏன் மக்கள் மனதில் உண்மையிலேயே ட்ராகூலா இருப்பதாகவும் , அது இந்த மாதிரியான தோற்றத்தில்தான் இருப்பதாகவும் பதியவைக்கப்பட்டது!

பழங்காலத்திலிருந்தே இரத்தத்தை உறிஞ்சும் அரக்கர்கள், காட்டேரிகள் பற்றிய புராணக்கதைகள் உள்ளன. அப்படிதான் டிராகுலா மற்றும் வாம்பயர் மூடநம்பிக்கை இடைக்காலத்தில் செழித்து வளர்ந்த (மூட )நம்பிக்கைகளும் ஒன்று. குறிப்பாக பிளேக் நோய் ஐரோப்பாவின் பல பாகங்களிலும் மிக வேகமாக பரவியபோது , இந்நோயின் தாக்கத்தினால் பலருக்கும் வாயில் இரத்தக்கறையுடன் கூடிய புண்கள் ஏற்பட்டது . இப்புண்ணா னது டிராகுலா கடித்ததின் அறிகுறி என்கிற தவறான கருத்து பாமரர்களிடம் பரவியிருந்தது . அதுமட்டுமன்றி சூரிய ஒளியின் தாக்கத்தினால் சாதாரணமாக ஏற்பட்ட தோல் அழற்சி நோய்கூட டிராகுலா நம்பிக்கையுடன் தொடர்புபடுத்தப்பட்டது .



பிரியா இராமநாதன்
(இலங்கை)



ஒருவர் இறந்துபோன பிறகுதான் ட்ராகூலாவாக உருவாகமுடியும் கதைகளின்படி . நாம்கூட திரைப்படங்களில் பார்த்திருப்போம் சூரிய வெளிச்சத்திற்கு மட்டும் ட்ராகூலா அஞ்சி ஒடுங்கி ஓடுவது போல !

ஆம் ட்ராகூலாவிற்கு சூரிய வெளிச்சம் ஆகவே ஆகாது . விடிவதற்குள் மனித இரையை தேடிப்பிடித்து கடித்து ரத்தத்தினை குடித்துவிட்டு கல்லறை பெட்டிக்குள் சென்று படுத்துக்கொள்ளும் . சரி , செத்தும் இப்படி ட்ராகூலாவாய் வந்து நிற்கும் இந்த உடலை எப்படித்தான் அழிப்பதாம் ? முதலில் அது எந்த கல்லறைக்குள் இருக்கிறது என்பதை இடுகாட்டுக்கு சென்று தேடி கண்டுபிடித்தாகவேண்டும் . 19 நூற்றாண்டில் பாதிரியார்களின் உதவியுடன் ஒவ்வொரு கல்லறையாக தேடி கண்டுபிடிப்பார்களாம்!!!??? . கண்டுபிடித்தவுடன் உடனே தலையை வெட்டி எடுத்து கால்களுக்கு நடுவில் வைத்துவிட்டால் அது திரும்பவும் எழுந்து வராது என நம்பினார்களாம் சிலர் .

அதுசரி கல்லறையில் இருப்பது ட்ராகூலா தான் என்பதை எப்படி தெரிந்துகொள்வது ? ஆம் ட்ராகூலா என்றால் அது எலும்புக்கூடாக மாறியிராதாம். ஊசியால் குத்தினால் ரத்தம் வருமாம் . ரத்த ஓட்டத்தினை நிறுத்த அதன் இருதயத்தினை பிய்த்தெடுத்து கொதிக்கும் எண்ணையில் அல்லது நெருப்பில் போட்டு அழித்துவிடுவார்களாம். அல்லது மரத் தால் செய்யப்பட்ட பெரிய ஆணி போன்ற சிலுவையை அதன் இதயத்திற்குள் செலுத்திவிடுவதுண்டாம் . அப்படியானால் ட்ராகூலா கதைகள் உண்மை தானா என்றால் , நிச்சயமாக இல்லை . ஆனால் உலகெங்கிலும் மக்கள் ட்ராகூலாவை நம்ப விரும்பினார்கள் என்பதே யதார்த்தம்.

பல வருடங்களுக்குமுன் நியூயோர்க் நகரில் " வாம்பயர் சோதனை ஆராச்சி மையம் " ஒன்று நடாத்திய ஆராச்சியில் பெண்களிடையே எடுக்கப்பட்ட ஓர் விசித்திரமான கருத்துக்கணிப்பில் எழுபது சதவீதம் பெண்கள் சந்தர்ப்பம் கிடைத்தால் வாம்பயறுடன் குறிப்பாக ட்ராகூலாவுடன் உடலுறவு வைத்துக்கொள்ள ஆசை என்று குறிப்பிட்டிருந்தனராம் . எல்லாம் அக்கால கட்டத்தில் வெளியான அதிகப்படியான ட்ராகூலா திரைப்படங்களின் பாதிப்பே என்று அந்த ஆராச்சியின் தலைமை வைத்தியர் "ஸ்டிபன் கேப்லான்" கருத்து தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது .






# ரெட்டை கட்டிப் பறக்குதடீ

உலகப் பொருளதாரம் கொரானாவின் உச்சத்தில இருக்கேக்க எல்லாரும் சைக்கிள் வாங்க நானும் ஒண்டை வாங்கினன். " அப்பா என்னை சைக்கிளில வைச்சு ஒருக்காச் சுத்துவீங்களோ" எண்டு சின்னவள் கேக்க நானும் மூச்சு வாங்க ஒரு சுத்தி சுத்தீட்டு வந் திறங்க , மனிசி தன்னையும் எண்டு கேக்க சைக்கிள் என்னைப் பாத்து சிரிச்சுது.

"லவ் பண்ணிற காலத்தில ஏறும் ஏறும் எண்டு கேட்டிட்டு இப்ப மாத்திரம் என்ன" எண்டு மனிசி முறைச்சுது.

லவ் ரொமான்சுக்கு நல்ல வாகனம் ஒண்டு குதிரை இல்லாட்டிச் சைக்கிள் தான். இதில வாற சுகம் காரில தேரில கூட வராது. சைக்கிளில ஏத்திக்கொண்டு போகேக்க முட்டியும் முட்டாமலும் படிற முதுகு , சட்டை யோட சேந்து தட்டுப்படிற இடது கால் , பின்னால வருடிற வலது துடை மூக்கில உரசி வாயில கடிபடிற பறக்கும் தலைமயிர் எல்லாம் ஒரு மயக்கம் தர அப்பிடியே handle கைபிடியில இருக்கிற கையை அரக்கி நடு handle இல நடுங்கி நடுங்கி இறுக்கிப் பிடிச்ச படி சூடா இருக்கிற மூக்கு நுனியால மூச்சை கழுத்துப் பக்கம் குனிஞ்சு விட அந்த சூட்டில மனிசீன்டை காது சிவக்க என்ன கதைக்கிறது எண்டு தெரியாமல் நான் ஏதோ சொல்ல மனிசி திரும்பி " காணும் நிப்பாட்டுங்கோ நான் இறங்கிறன் " எண்டு சொல்ல , நானும் சடின் பிறேக்க போட்டு நிப்பாட்டிறதும் மனிசி இறங்கி ஓடிறதும் இடைக்கிடை நடந்தது. ஒவ்வொருக்காலும் கைக்கு சிக்கினது காதோட முடிஞ்சுது எண்டு கவலைப் பட்டாலும் , ஏதோ கிடைச்ச மட்டும் லாபம் எண்டு இருந்தனான்.

சைக்கிள் செயினைக் கழட்டி பொம்பிளைப் பிள்ளைகளின்டை வீட்டைக் கண்டு பிடிக்க உதவும், இயக்கமோ ஆமியோ சந்தீல நிண்டால் பிடிபடாமப் பறக்கச் செய்யும், குறூப்பாச் சேந்து சண்டைக்குப் போட்டு நிலமையைப் பாத்திட்டு அரைவாசியிலயே தப்பி ஓட வைக்க எண்டு நிறைய உதவி செய்யும். சைக்கிள் ஏற , இறங்க , ஓட நிப்பாட்ட எண்டு எல்லாத்துக்கும் வசதி. எங்கையும் கொண்டே நிப்பாட்டலாம், ஸ்டாண்ட் இருந்தா நடு ரோட்டில, இல்லாட்டி வேலியோ, மரமோ,ஒரு மதிலோ இருக்கும் சாத்திவிட. அதோட மதிலோட சாத்தீட்டு இருக்க அது கதிரை, மரத்தோட சாத்தீட்டு ஏறி மாங்காய் புடுங்க ஏணி, வேலிக்கு மேலால எட்டி விடுப்புப் பாக்க ளவயனெ , டைனமோவை உருட்டி பாட்டுக்கேக்க உதவிற generator எண்டு multi purpose ஆப் பயன்படும்.

"விட்டா நீ உதில தான் கக்கூசுக்கும் போவாய் " எண்டு அம்மம்மாவிட்டை பேச்சு வாங்கிற அளவுக்கு சைக்கிள் வாழ்க்கையோட ஒட்டி இருந்தது. எல்லாம் கடன் வாங்கிற வீட்டுப் பழக்கத்தில சைக்கிள் மடலடும் கடன் வாங்க வேண்டி இருக்கிறேல்லை ஏனெண்டால் தெரியாதவன் கூட எங்க மறிச்சாலும் ஏத்திக்கொண்டு போய் விடுவான். " அண்ணை நேரயோ போறீங்கள் " எண்ட கேட்டவருக்கு பதில சொல்லாமல் ளடழற பண்ணி இடது கையை தூக்கி இடம் விடப் பாஞ்சு ஏறினவர் நன்றிக் கடனாக pedal போட்டுத் தர ஏத்தின சுமை தெரியாம ஓடலாம். "இது தான் சந்தி ,சரி வாறன் எண்டதில " இருந்த வாயமெ லழர க்கு

யாழ்பாணமும் ஒரு காலத்தில ஒக்ஸ்போட் மாதிரி ஒரு சைக்கிள் சிற்றி தான். VC துரைராஜாவில இருந்து Prof. சிவசூரியா வரை சைக்கிள் தான் திரிஞ்சவை. சைக்கிள் அது ஒரு ஆபத்பாந்தவன், canteen க்கு காசில்லாட்டி அம்மாட்டை காசு வாங்க எனக்காக ரெண்டு ஒட்டு வாங்கும், பள்ளிக்கூடம் பிந்திப் போய் detention உடயளள இல மாட்டாம இருக்க காத்துப் போகும். அப்பப்ப சிரிப்பாலயே " you are wel come " எண்ட படி தொடந்து உழக்கிறது அடுத்த ஆள் ஏறும் வரை. அப்ப ஆம்பிளைகளுக்கு இருந்த ஒரே ஆபரணம் சைக்கிள் தான் . அதால தான் அவன் அதை துடைச்சு துடைச்சு கவனமாப் பாவிப்பான் ஆரையும் ஏத்துவான் ஆனால் லேசில இரவல் குடுக்க மாட்டான்.

சைக்கிள் எண்டால் Size க்கு ஏத்த மாதிரி அரைச்சைக்கிள், கேபிள் போட்ட முக்காச் சைக்கிள், பின்னுக்கு support ஓட வாற chopper cycle மற்றும் சாதாரண சைக்கிள் எண்டு கன வகை இருந்தது. எண்பதுகளில் பெடியள் எல்லாருக்கும் ரெண்டு crush ஒண்டு சில்க் சுமிதா மற்றது யுளயை டிமைந.

சிவலிங்கப்புளியடி சண்முகலிங்த்தின்டை சைக்கிள் கடையில அரை நாளுக்கு ஐஞ்சு ரூவா எண்டு வாடகைக்கு அரைச்சைக்கிள் வாங்கி பழகின பக்கத்து



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

வீட்டு அண்ணாட்டை இலவசமா இரவல் வாங்கி உருட்டத் தொடங்கி விழுந்தெழும்பி ஓடிப் பழகத் தொடங்கினன்.

வீட்டை "ஓடிப்பழகவா" எண்டு கேட்டால் "ஏன் இப்ப கொஞ்சம் பொறு " , பஸ்ஸில போ எண்டு பழகவிடாதுகள். ஓடுவன் எண்டு ஓடிக்காட்டிக் கேட்டாத்தான் சைக்கிள் கிடைக்கும். அடுத்த மாசம் ஊருக்கு வந்த அப்பாவுக்கு ஓடிக்காட்ட அடுத்த வருசம் பள்ளிக்கூடம் போக சைக்கிள் வாங்கித் தாரன் எண்டார். அப்பா திரும்பிப்போக அடுத்த நாளே அம்மாவை " எப்ப வாங்கித் தாராராம் எண்டு நச்சரிக்க" அடுத்த முறை லீவில அப்பா வரக் கேப்பம் எண்டா.

ஆறாம் வகுப்புக்கு போக முதல் ஒரு மாதிரி கரும்பச்சைக் கலர் ஏசியா சைக்கிள் கஸ்தூரியார் வீதி வெங்கடேஸ்வரா கடையில போய் வாங்கினம். சைக்கிளை மட்டும் வித்திட்டு மற்றதெல்லாம் extra எண்டு சொல்ல பின்னுக்கு ஒரு கரியர்,handle பூட்டிற கரியர், பெல், side ஸ்டாண்ட், டியசக்கு கவர், பிறேக் கம்பிக்கு வயர், மட்கார்ட் கவர் எண்டு தேடித் தேடி வாங்கி அதோட ரயர் ரெண்டுக்கும் மறக்காம் பூவும் அங்கங்க குஞ்சமும் போட்டு உருட்டிக் கொண்டு வீட்டை வந்தன் , வாங்கின சைக்கிளைக் கழுவிப்பூட்டித்தான் ஓட வேண்டும் எண்ட படியால்.

கட்டின புதிசில மனிசியும் வாங்கின புதுசில வாகனமும் நல்லாத் தான் இருக்கும் போகப்போக தான் பிரச்சினைகள் வாறதோட maintenance cost ம் கஸ்டமாய் இருக்கும். அப்ப சந்திக்கு ரெண்டு சைக்கிள் கடை இருந்தும் பத்தாமல் இருந்தது. சின்ன வேலைக்கும் waiting time கூடவா இருந்திச்சுது, " விட்டிட்டுப் போங்கோ பாப்பம் ஐஞ்சு சைக்கிள் நிக்குது" எண்டு தொடங்கி, ஆறேழு தரம் அலைய வைச்சுத்தான் திருத்தித் தருவாங்கள். இப்ப எப்பிடி mobile phone இல்லாம இருக்கேலாதோ அப்பிடித்தான் அப்ப சைக்கிளும் இல்லாமல் இருக்க ஏலாது. சைக்கிளை திருத்தக்குடுத்திட்டு போய் வாறதுக்கு ஆருக்கும் பின்னால கெஞ்சித் திரியிற கொடுமை இருக்குதே, யோச்சாலே எரிச்சல் வரும். இப்ப ஆசுபத்திரிக்கு வாறவனெல்லாம் அரைமணித்தியாலம் இருக்கமுடியாமல் புறுபுறுப்பாங்கள் ஆனால் சநியசை க்கு வாகனத்தைக் குடுத்திட்டு அலையேக்க மட்டும் சும்மா இருப்பாங்கள்.

எங்கயாவது அவசரமாப் போக வெளிக்கிடேக்க தான்

28 ஆம் பக்கம் பார்க்க...






## கேள்விக்குறியாகும் எதிர்காலம்;

# இலங்கையில் தமிழ் மாணவர்களை ஆக்கிரமிக்கும்

# போதை பொருள் இளவயது கர்ப்பங்கள்

இலங்கையில் இன்று எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைத்த ஒரு விடயம் கொரொனாவுக்குப் பிறகு இந்த கொடிய போதைப் பொருள் பழக்கமாகி உள்ளது.

கொரொனாவுக்குப் பயந்து வீட்டுக்குள்ளே அடைந்தவர்கள் இன்று இன்னுமொரு வைரசுக்கு அடிமையாகியுள்ளனர் என்றே கூற வேண்டும். அதிலும் சிறுவர்கள் ஒட்டுமொத்தமாக இந்த போதைப் பொருட்களிடம் தோற்று போயுள்ளனர். எங்கு பார்த்தாலும் ஏதாவது ஒரு போதைப் பொருள் பற்றிய செயதி எம் காதுகளுக்கு வந்த வண்ணமே உள்ளது. குழந்தை முதல் குமரி வரை எங்கும் அவர்களை தம் வசப்படுத்தி கட்டுக்குள் கொண்டுள்ளது இந்த போதை என்றால் அது மிகையல்ல. ஆச்சர்யம் கலந்த பயத்தில் கண்கள் அகல விரியுதே தவிர ஆகியது ஒன்றும் அல்ல. தொடர்ந்து போதை பரவல் தன் வேலையை பல்வேறு கோணங்களில் காட்டிக்கொண்டே பரந்து விரிந்து வியாபித்த வண்ண முள்ளது.





பொதுவாக இன்றைய கால கட்டத்தில் வடக்கு, கிழக்கு, மலையக பகுதிகளில் போதைப் பொருள் பாவனை தற்போது அதிகரித்து வருவதை அறிய முடிகின்றது. யாழ்ப்பாணத்தின் வடக்கில் போதைக்கு அடிமையாகியதில் அண்ணன் தம்பியே கூட்டு வன்புனர்தலில் ஈடுபட்டு வருவதாக அறிய முடிகின்றது. பாடசாலை மாணவர்கள் மாவா, ஐஸ் என்கின்ற போதைப் பொருட்களுக்கு பழக்கப்பட்டு பல்வேறு பிரச்சினைளுக்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் முகம் கொடுத்து வருவது யாவரும் அறிந்த தே. இன்று இதன் விஸ்வரூபம் பல்வேறு வண்ணங்களில் இனிப்பு பண்டமாக சந்தைகளுக்கு வந்துள்ளது. பாட சாலை மாணவர்களை இலக்கு வைத்தே கவர்ச்சிகரமான நிறங்களுடன் விற்பனை செய்யப்படுகிறது. நாட்டின் எதிர்கால தலைமுறையை அழிக்கும் ஒரு வேலைதிட்டமாக இன்று இப்போதைப் பொருளின் வருகை பதிவாகியுள்ளது. இது தொடர்பான படங்களும் விழிப்புணர்வு பதிவுகளும் சமூக வலைத்தளங்களில் இன்று பேசு பொருளாக காணக் கூடிய நிலையிலும் வடக்கு,கிழக்கு, மலையக பாட சாலை மாணவர்கள் இந்த இனிப்பு போதைப் பொருள் பாவனையில் உள்ளதாக சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர்.



மாலினி
கொட்டகலை
(இலங்கை)

இது இவ்வாறு இருக்க வடக்கு, கிழக்கு பகுதிகளில் பாடசாலைகளில் பெண் பிள்ளைகள் சிலர் சிகரெட் பிடிக்கும் கலாசாரத்தை தன்வசப்படுத்தி வருகின்றனர். சில செலவந்த குடும்பத்தை சேர்ந்த பிள்ளைகளே இவ்வாறு போதைக்கு அடிமையாகி வருகின்றனர். மேலும் யாழில் ஊசிகள் மூலம் போதைப் பொருள் விற்கப்பட்டு வருகிறது. இதன் போது ஊசிகள் பயன்படுத்திய 10 பேர் உயிரிழந்ததாகவும், சுமார் 320 பேர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் பெரும்பாலானோர் 18 23 வயதிக்கு உட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பொது இடங்களில் போதை அருந்துதல் தடை ஆயினும் இன்று இதுவே இடைவிடாது இடம் பெறுகிறது. பாதுகாப்பு படையினர் சிலர் கண்டும் காணாமல் போவதும், அவ்வாறு அன்றி அவர்களையும் தன் வசப்படுத்தி அதில் பலர் குளிர் காய்கின்றனர்.

இப்படி பட்ட காவலாளிகள் கூட்டம் எப்படி உருப்படும். எவருக்குத்தான் பயப்படும். மேலும் பிரபல பாடசாலைகளின் மாணவர்கள் சிறுவயதில் கர்ப்பம் தரிப்பது எண்ணளவில் இன்று அதிகரிகின்றது. மலையகத்தின் பிரபல பாடசாலை ஒன்றில் இவ்வருடத்தில் மட்டும் சிறுவயது கர்ப்பம் தரித்த பெண்கள் சுமார் 5 என தெரிய வந்துள்ளது. பெண் பிள்ளைகள் போதைக்கு அடிமை ஆவதும் சிறுவயதில் கர்ப்பம் தரிப்பதும் அவர்களின் எதிர்கால வாழ்வையே அழித்து விடுமால்லவா. இது மிக பெரிய சிறுவர் துஸ்பிரயோகம் அல்லவா. ■

28 ஆம் பக்கம் பார்க்க...

Chola Tech
Mitarbeiter B2B
Telemarketing
(m/w/d) gesucht
Feste Anstellung
Vollzeit, Home Office möglich
Ab sofort oder nach Vereinbarung
Montag - Freitag (8:00 - 16:00)
Für weitere Informationen
scannen Sie bitte diesen QR-Code.
மேலும் தகவலுக்கு,
இவ் விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள QR-Codeஐ ஸ்கேன் செய்யவும்.
தொலைபேசி வாயிலாக
வணிகத்திற்கு வணிகம்
சந்தைப்படுத்தும் பணியாளர் தேவை
(ஆண்/பெண்/இதரபாலினம்)
உறுதியான வேலைவாய்ப்பு
முழுநேர, வீட்டு அலுவலகம் சாத்தியம்
உடனடியாக அல்லது நியமனம் மூலம்
திங்கள் - வெள்ளி (8:00 - 16:00)

மாதவி (யேர்மனி)



# காவோலை விழக் குருத்தோலை சிரிக்குமாம்!

## காவோலையை ஒரு காவோலை படம் எடுத்தது!

காவோலை விழ குருத்தோலை சிரிக்குமாம் என்று ஒரு பழமொழி முன்னர் ஊரில் முதியவர்கள் சொல்லிக் கேட்டு இருக்கின்றேன்.பாடசாலையில் படிக்கும்போதும் ஆசிரியர்கள் இதனைச் சொல்லி விளக்கம் தருவார்கள்.

இருந்தாலும், முதியவர்கள், சரியான இடத்தில் சரியாக இதனைச் சொல்லும் போது சுள் என்று ஏறும், ஆனால் பதிய மறுக்கும் வயது.

இதே காவோலை ஒன்று நான் தாயகத்தில் வட்டுக்கோட்டை யில் தெருவால் நடக்கும் போது பனைமரத்தில் இருந்து கீழே வீழ்ந்தது. சரசரக்கும் சத்தம் கேட்டதும், புரிந்து கொண்டு போன் கமரவை எடுத்தேன். காவோலையும், எனக்கு உதவுயாக உடன் கீழ் விழாது மின்சார வயரில் வீழ்ந்து, சற்று நின்று, கீழ் விழுந்தது. நான் உடன் கிழிக் செய்தேன்.

காவோலை கூட உடன் விழாது, முடிந்த வரை தயங்கி, தங்கியே மண்ணை அடைந்தது.

அன்று தெருவில் போகும் முதியவர்களின் சால்வையை இழுத்துக்கொண்டு ஓடும்போதும்,அருகில் வந்து சைக்கிளில் கால் பிறேக்போட்டு முதியவர்களைப் பயமுறுத்தும்போது, முதியவர்கள் இந்தப் பழமொழியை சொல்லிப் பேசுவார்கள். அவர்கள் சொல்லும்போதும் , ஆசிரியர்கள் விளக்கும்போதும், விளங்கியதை விட தற்போது அர்த்தம் தெளிவாகவே புரிகின்றது.

காரணம் காவோலை விழக் குருத்தோலை சிரிக்க, ஒரு காவோலையல்லவா படம் எடுத்தது.

படம்:வெற்றிமணி சிவகுமாரன்.

## ஒரு காலத்தில் இப்படி ஒரு பஸ் சேவை இருந்ததாம்




கல்கத்தாவிலிருந்து காசி, அலகாபாத், ஆக்ரா, டெல்லி, லாகூர், ராவல்பிண்டி, கண்டஹார், காபூல், தெஹ்ரான், இஸ்தா ன்புல்: அங்கிருந்து பல்கெரியா, செர்பியா, அவுஸ்திரியா, ஜேர்மனி ஊடாக பெல்ஜியம் வரை செல்லுமாம். அங்கிருந்து இங்கிலாந் துக்கு கப்பலில் போவார்கள் என்று நினைக்கிறேன்.

கட்டணம் 85-145 பவுண்டுகள். 20,000 km இற்கு மேற்பட்ட பயணம்.

# ஜனாதிபதி ரணிலை பாராட்டுகிறேன்..!

மனோ கணேசன்



## கதிர்காம கந்தனும் கௌதம புத்தரும் காப்பாற்றட்டும்



முதன்முறையாக நாட்டின் தலைவர் “தமிழ் பௌத்த வரலாற்றை“ பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளார்.இலங்கை தீவின் வரலாற்றில் தமிழ் பௌத்த வரலாற்றுக்கு உரிய இடத்தை ஏற்றால், அது இன்று நாம் எதிர்கொள்ளும் அநேக பிரச்சினைகளுக்கு தீர்வு தரும் சாவியாகும்.

ஒன்றரை மாதங்களுக்கு முன் ரணிலை சந்தித்து உரையாடிய போது எமது உரையாடலில் தமிழ் பௌத்தம் இடம்பெற்றது. இப்படி ஒரு வரலாறு இருப்பதை சிங்கள தீவிரர்கள் எப்போதும் மறைக்க விரும்புகிறார்கள்.

வெறும் கைகளால் சூரியனை மறைப்பதை போன்று...

விஜய இளவரசன் வந்து இறங்கிய கதை பொய்யென்று என்னை தேடிவந்து ஞானசாரர் சொன்னது போன்று...

விஜயன் வரவை நினைவுகூர்ந்து முத்திரை வெளியிட்டு விட்டு பின்னர், அஞ்சல் திணைக்களம் அதை வாபஸ் பெற்றதை போன்று...

2018ம் வருடம் அமைச்சராக இருந்த போது, ஒரு காரியம் செய்தேன்.

பேராசிரியர் சுனில் ஆரியரத்ன, (Sunil Ariyaratne ) இலங்கையின் தமிழ் பௌத்த வரலாற்றை பற்றி சான்றுகளுடன் எழுதிய, “தமிழ் பௌத்தன்“ (தமிழ பௌத்தயா) என்ற சிங்கள நூல் நாட்டில் பாவனையில் இல்லாமல் இருந்தது.

அந்த நூலை தேடி பிடித்து, அவருடன் கஷ்டப்பட்டு, பேசி, அனுமதி பெற்று (எனது செயலாளர் பிரியாணியின் பல்கலைக்கழக பேராசிரியர், அவர்!) அதை அமைச்சின் செலவில் (ஒரு பத்தாயிரம் பிரதிகள்) மறுபிரசுரம் செய்து, சிங்கள பாடசாலைகளுக்கும், விகாரைகளுக்கும் இலவசமாக அனுப்பி வைத்தேன்.

அமைச்சில் சில சிங்கள அதிகாரிகள் முகத்தை சுழித்தார்கள். பிரசுர பணிகளை தாமதப்படுத்தினார்கள்.அதன் பின் சில ஆஆஆ...மதுருக்கள், சுனில் ஆரியரத்னவை தொலைபேசியில் அழைத்து கிழித்துள்ளார்கள்..!

என்னையாரும் கிழிக்கவில்லை. இப்போது ரணிலை கிழிப்பார்களோ தெரியவில்லை. அவரை கௌதம புத்தனும், கதிர்காம கந்தனும் காப்பாற்றட்டும்.

டொட்மூண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்
வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag
கீபோர்ட் (Keyboard)
18:00–19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde
தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
16:00–17:45
Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen
யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
19:15– 20:15
6€ Pro Stunde
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும் யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்
தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# இறுதி ஆசை இன்னும் நிறைவேற்றப்படாமல் மீளாத்துயில் கொள்ளும் ஜி.யு.போப்



தமிழுக்கு மிகப்பெரிய தொண்டாற்றிய ஆங்கில /தமிழ் மற்றும் மொழியியல் மேதை ஜி.யு.போப் தனது நண்பருக்கு எழுதி கடிதத்தில் இறுதி ஆசைகள் மூன்றினைத் தெரிவித்திருந்தார்.

1. கல்லறையில் ஒரு தமிழ் மாணவன் என்று எழுதுங்கள்.






2. மொழி பெயர்த்த திருக்குறள்,நாலடியார் போன்ற நூல்களைக் கல்லறையில் வையுங்கள்.

3.கல்லறை கட்டுவதற்கு தமிழர்கள் ஒரு சிறு உதவியேனும் செய்யுங்கள்

என்பவைதான் அந்தக் கோரிக்கைகள்.

கடந்த 28.05.2023 அன்று லண்டனிலிருந்து ஆறு நூல்களைப் படைத்த படைப்பாளி ,பொறியியலாளர் திரு.எம்.ரி.செல்வராஜா அவர்களையும் அழைத்துக்கொண்டு ஒக்ஸ்போட் நகரில் Walton well Road இலிருக்கும் ஜி.யு.போப்பின் கல்லறையைக் காணச் சென்றிருந்தேன்.

அதுவொரு ஞாயிற்றுக்கிழமை ஒக்ஸ்போட் நகரத்தின் பிரதான வீதியில்


ஜி.யு. போப் (1820-1908)

காணப்படும் அந்த மயானத்துக்குள் துழைந்தோம்.

மயானத்தின் ஆரம்பத்திலேயே சுமார் எட்டாவது,ஒன்பதாவது கல்லறையாக அமரர் ஜி.யு.போப்பின் கல்லறை காணப்படுகிறது. தனது வாழ்விலே கல்லறை பற்றிக் கனவு கண்டவரின் கல்லறை பத்தோடு பதினொன்றாக தனித்த அடையாளங்கள் எதுவுமின்றி இருப்பது எமக்கு வேதனையைத் தந்திற்று.

உலகளாவிய ரீதியிலே ஜி.யு.போப்பின் வரலாற்றைக் அறியும் போது, அவர்தம் கல்லறையில் இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்குகிறான்என்று எழுதப்பட்டுள்ளதாகவே கற்பிதமாகிறது,அதனையே பலரும் நம்புகிறார்கள்,ஆனால் அது உண்மை இல்லை.

அங்கே அப்படி எதுவும் எழுதப்படவில்லை.அவருடைய இறுதி ஆசை இதுவரைக்கும் நிறைவேற்றப்படவேயில்லை.

கல்லறை சாதாரண கல்லறையாகவே காணப்படுகிறது.தமிழ் மக்களாகிய நாங்கள் ஜி.யு.போப்பின் கல்லறையில் அவர்தம் விருப்புகளைப் பதிய வேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

**ஜி.யு.போப்பின் கல்லறையிலிருந்து -கல்லாறு சதீஷ்- மற்றும் எம்.ரி.செல்வராஜா. (ஒக்ஸ்போட், 28.05.2023)**



# இப்போதைக்கு இதுவே...

கல்வி போனது
கலை போனது
நல்ல மூளைகள்
நாடு கடந்தன

சொல்லிக் கொடுத்த
பண் பாடுகள்
சொல்லாமலே

சோர்ந்து போயின
வாத்தி யார்கள்
வாய்கள் மூடினர்
வாலி பர்கள்
வரம்பு மீறினர்
புதிய முயற்சிகள்
புதைந்து போயின
வதியும் விருப்பு

வானைக் கடந்தது

முதியோர் இல்லங்கள்
முளைத்துக் கொண்டன
பதியி லுள்ளோர்
பாதுகாப் பிழந்தனர்

பாதை முழுவதும்
போதை கலந்தது
கீதையும் கிருஸ்ணரும்

ஹோல் அலுமாரியில்
துணையே துயரம்
பிணையே பிரச்சினை
பனை போனது
மனை போனது

இப் போதைக்கு
வடக்கில்
வான் தொடும் அதிசயம்
இது தான்

**கவிஞர் த.ஐங்கரன் (இலங்கை)**




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.




Gemeinsam in Vielfalt Der Integrationsrat | SIVANDIGITAL | VMDO | TKD | ortel MOBILE

வெற்றிமணி | அகரம் | தமிழ் ரைம்ஸ் TAMIL TIMES | STS | தமிழ் MTV | IBC தமிழ் | Lankasri | ETR

0151633 633 33 | 0157 370 50 110 | 0179 26 30 317 | 0151 279 909 90




கலாபூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)

# ஈழத்தின் நவீன தமிழ் கவிதைக்கு முன்னோடி மஹாகவி

**அன்பென்று கொட்டு முரசே! - மக்கள்
அத்தனைப் பேரும் நிகராம்.**

யாவரும் ஒன்றெனக் கொண்டால் இன்பங்கள் யாவும் பெருகும் என்ற மந்திரத்தை நினைத்திருந்த வேளை,

அலையெடுத்த கடலென
ஆற்றல் கொண்ட பாரதி
கலைஞனின் கவிதை இக்
காசினி யெலாம் பெரும்
ஒலி கிளர்த்த வேணும்

என்று முழங்கிய நம் மஹாகவியின் கவிதைகளை எண்ணியபடி அவர் வாழந்த காலத்தையும், அப்போதான வாழ்வியல் சூழலையும் நினைத்திருந்தேன்.

பெரும் நம்பிக்கையும், மனிதாபிமானமும் , சமூக மடமைகள் மீதான எதிர்ப்பும் கொண்டது அவர் வாழ்வும், படைப்புக்களும்.

ஊரெல்லாம் கூடி
ஒருதேர் இழுக்கிறதே
வாருங்கள் நாமும் பிடிப்போம்
வடத்தை – என்று
வந்தான் ஒருவன்.

வயிற்றில் உலகத்தாய்
நொந்து சுமந்திங்கு நூறாண்டு வாழ்
வதற்காய்ப்
பெற்ற மகனே அவனும்.

பெருந் தோளும், கைகளும்,
கண்ணில் ஒளியும்,
கவலையிடை உய்ய விழையும்
உளமும் உடையவன்தான்.
வந்தான். அவன் ஒரு இளைஞன் –
மனிதன் தான்.

சிந்தனையாம் ஆற்றற் சிறகுதைத்து
வானத்தே
முந்த நாள் ஏறி முழுநிலவைத்
தொட்டுவிட்டு
மீண்டவனின் தம்பி
மிகுந்த உழைப்பாளி!

*மேலவர் கீழவரென்றே வெறும்
வேடத்தில் பிறப்பினில்
விதிப்பனவாம்
போலிச் சுவடியை எல்லாம் இன்று
பொசுக்கி விட்டால் எவர்க்கும் நன்மை
உண்டென்பான்*

ஈண்டு நாம் யாரும் இசைந்தொன்றி
நின்றிடுதல்
வேண்டும் எனும் ஓர்
இனிய விருப்போடு
வந்தான் குனிந்து வணங்கி
வடம் பிடிக்க.
நில்! என்றான் ஓரான்
நிறுத்து! என்றான் மற்றோரான்.
புல் என்றான் ஓராள்
புலை என்றான் இன்னோராள்
சொல் என்றான் ஓராள்
கொளுத்து என்றான் வேறோராள்.



*ஜாதி மதங்களைப் பாரோம் – உயர்
ஜன்ம ம் இத் தேசத்தில்
எய்தினராயின்
வேதியராயினும் ஒன்றே அன்றி
வேறு குலத்தவராயினும் ஒன்றே
ஈனப் பறையர்களேனும் அவர்
எம்முடன் வாழ்ந்திங்கிருப்பவர்
அன்றோ ?
சீனத்தவராய் விடுவாரோ ?
பிற தேசத்தாற் போற்
பல தீங்கிழைப்பாரோ ??*

கல்லொன்று வீழ்ந்து
கழுத்தொன்று வெட்டுண்டு
பல்லோடு உதடுபறந்து சிதறுண்டு
சில்லென்று செந்நீர் தெறிந்து
நிலம் சிவந்து
மல் லொன்று நேர்ந்து
மனிசர் கொலையுண்டார்.

*நாலு குலங்கள் அமைத்தான் அதை
நாசமுறப் புரிந்தனர் மூட மனிதர்*

ஊரெல்லாம் கூடி இழுக்க
உகந்த தேர்
வேர் கொண்டதுபோல் வெடுக்
கென்று நின்றுவிடப்
பாரெல்லாம் அன்று படைத்தளித்த
அன்னையோ
உட்கார்ந்திருந்துவிட்டாள்



ஊமையாத் தான்பெற்ற
மக்களுடைய மதத்தினைக்
கண்டபடி.
முந்த நாள் வான முழுநிலவைத்
தொட்டுவிட்டு
வந்தவனின் சுற்றம்
அதோ மண்ணிற் புரள்கிறது!
சாதி நூறு சொல்வாய் போ போ போ
சாதி நூறு சொல்வாய் போ போ போ

சூத்திரக்காரனுக்கு ஒரு நீதி
தண்டச் சோறுண்ணும் பார்ப்ருக்கு
வேறொரு நீதி

*சாத்திரஞ் சொல்லிடுமாயின்
அது சாத்திரமன்று கண்டோம்
சாதிப் பிரிவுகள் சொல்லி அதில்
தாழ்வென்றும்
மேலென்றும் சொல்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார் அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்*

*சாதிக் கொடுமைகள் வேண்டா அன்பு
தன்னில் செழித்திடும் வையம்.*

*மனமகிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒரு நிகர்
சமானமாக வாழ்வமே !*

இவ்வண்ணமாக மஹாகவி உருத்திர மூர்த்தி அவர்களின் தேரும் திங்களும் என்ற கவிதையை படிக்கும் போது மஹாகவி பாரதியின் வரிகள் இடையிடையே தொடர்ச்சியாக உள்ளூறி நின்றது. இரு மஹாகவிகளையும் ஒன்றாய் என் உள்ளம் தரிசித்துக்கொண்டிருந்தது.

எல்லோரும் ஓர் இனம் , எல்லோரும் ஓர் குலம், எல்லா உயிர்களும் இன்பம் எய்துக என்று அபிநயக்ஷேத்திராவில் அடிக்கடி சொல்லும்

29 ஆம் பக்கம் பார்க்க...

EST: 2014
லிவர்ப்பூல் தமிழ்க்கல்விக்கூடம்
Liverpool Tamil Kalvikkoodam

தமிழ் எங்கள்
உயிரின் இருப்பு

லிவர்ப்பூல் தமிழ்க்கல்விக்கூடம்
Liverpool Tamil Kalvikkoodam

Opening Time;
Saturday's between 1:30 PM and 5 PM.

Telefon: 07723 957543

THE DE LA SALLE ACADEMY, Carr Ln E, Croxteth , Liverpool L11 4SG, UK


AJ
ENTERTAINMENT
A.R.RAHMAN
LIVE MIT DIR!
ALL INFOS SOON WWW.TAMIL.DE



# பேரண்ட ஆற்றலின் அலையை கையாள்வது எப்படி



அளப்பரிய சக்தியின் அதிர்வலையோடு வெட்டவெளி எட்டு திசைகளிலும் பரந்து, விரிந்து கிடக்கிறது. மழையும் அதன் சாரலும் போல் எங்கும் எங்கெங்கும் சக்தி விழுந்த வண்ணமே இருக்கின்றது. இத்தகைய சக்தியின் சிறு வெளிப்பாடே உலகாய படைப்புகளாக விரிந்துள்ளது எனினும் அதன் பெரும் சக்திநிலை உருவமற்ற அதிர்வாக சுழன்றுகொண்டிருக்கின்றது. இத்தகைய இயற்கையின் சக்தி எப்பொழுதுமே வெறுமையை விரும்புவதில்லை. ஒரு இடம் வெற்றிடமாக இருந்தால் அதை நிரப்புவதே இயற்கை சக்தியின் செயலாக இருக்கிறது.

நேர்மறை, எதிர்மறை என்ற எல்லா நிலையும் இயற்கையில் வீரியமாகவே உள்ளன. இவ்வாறு பரந்துவிரிந்த



இயற்கையின் சக்தி எங்கு, எதனில் என்ன வடிவமோ, செயலோ, பொருளோ அதனதன் தன்மைக்கேற்ப அங்கே தன்னை நிறைத்துக் கொள்கிறது. உதாரணமாக சுவரில் வரையப்பட்ட ஒரு குறியீடு, உடலில் வரைந்த ஓவியம், குறிப்பிட்ட வடிவமுள்ள பொருட்கள், நறுமணம், நறுமணமற்ற பொருட்கள், மனிதர், விலங்கு, குணவியல்பு இப்படி எதையும் மிச்சமின்றி இந்த



சக்தி நிறைத்துக் கொண்டே இருக்கின்றது. பின் அதனிலிருந்து அதனதன் தன்மைக்கேற்ப சக்தியலைகளை வெளிப்படுத்தி அச்சூழலை அத்தன்மையோடு ஆளுகின்றது. ஒவ்வொரு பொருளும், வடிவமும் இவ்வாறு சக்தியை பெற்றுக் கொண்டு ஒன்றை ஒன்று ஈர்க்கின்றன. ஆற்றலில்

பலமானவை தன்னைவிட ஆற்றல் குறைந்தவற்றை உறுஞ்சும். பின் தன் தன்மையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும். மனிதனும் அப்படித்தான். ஆற்றல் மிக்கவர்கள் தம் ஆற்றல் அதிர்வலைகளை பரப்பிக்கொண்டிருப்பார்கள். அமைதி மிக்கவர் அமைதியின் அதிர்வலைகளை பரப்பிக் கொண்டிருப்பார்கள். எந்த சக்தியும் ஒரு இடத்தில் தேங்கிவிட முடியாது வெளிப்பட்டுக்கொண்டிருக்கும், அவ்விடயத்தின் தன்மைகள் மீண்டும் இயற்கையிலிருந்து இந்த இடைவெளிகளை நிரப்பிக் கொண்டிருக்கும்.



கரிணி
(யேர்மனி)

ஒரு வீட்டினுள் மிக அதிகப்படியான பொருட்கள் உண்டெனில் அப்பொருட்கள் யாவுமே அதனதன் தன்மைக்கேற்ப வெளியிலிருந்து சக்திகளை உறிஞ்சிக்கொண்டு தம் தன்மைகளை வெளிவிடும். அதிக அடைசல்களில் இருளான தன்மைகள்தான் அதிகம்



அவை எதிர்மறை விளைவுகளை தந்துவிடும். உதாரணமாக ஒரு மாட்டினையோ அல்லது ஒரு யானையினையோ உற்றுப் பார்த்தால் அவை படுப்பதற்கு தூய வெட்டவெளியை தெரிவு செய்யும், வெயில் பொழுதில் மட்டும் நிழலில் தங்கும். ஆனால் பூனை, நரி, வௌவால் போன்றவை இருண்ட மறைவான இடங்களைத் தேடும். அது போன்றே ஒவ்வொரு விடயங்களும் இருள்த்தன்மை, ஒளித்தன்மை என்ற வெளிப்பாடுகளோடு தொடர்புடையவை. அதிகப்படியான பொருட்களை அடைசல்களாக வீட்டில் வைத்துள்ளவர்கள் எப்போதும் சக்திநிலை குறைந்து சோர்வாக காணப்படுவார்கள். இவர்களுடைய சக்திகளை இவர்கள் வாழும் சூழல் உறிஞ்சிக்கொண்டு அங்கு தேவையற்ற அதிர்வலைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். எனவே அவசியமான பொருட்களை மட்டுமே எம்மோடு வைத்துக் கொள்ளுதல் நலம். புதிதாக ஒன்றை வாங்கும் பொழுது தேவைக்கு அதிகமான பழையதை நீக்கிவிடுதல் நலம்.

உடலில் பச்சை குத்திக் கொள்ளும் பழக்கம் முற்காலத்திலிருந்தே தொடர்கிறது. மனதுக்கு வீரியம் தரும் வடிவங்களையும், நேர்மறை சக்தியின் குறியீடுகளையும் வரைவார்கள். இன்றுபோல் விகார உருவங்களை அவர்கள் வரைவதில்லை. உதாரணமாக மேல்நோக்கிய முக்கோண வடிவம் மேல்நிலை சக்தி ஆன்ம விழிப்புணர்வு வாழ்வையும், கீழ்நோக்கிய முக்கோண வடிவம் உலகியல் வாழ்வையும் குறிக்கும். இத்தகைய இரு சக்தியின் சமநிலை அறுகோண நட்சத்திரத்தை குறிக்கும். பிரமிட் வடிவம் பேரண்ட ஆற்றலை குவித்து உள்ளே பிரவாகிக்க செய்யும். பேரண்ட ஆற்றல் முடிவிலி என்று அத்தகைய வடிவத்தை நீள் எட்டு வடிவத்தில் சிலர் பச்சை குத்திவிடுவதனால் அடுத்தடுத்த முடிவுகளை எடுக்க முடியாது ஒரே வட்டத்துக்குள் வாழ்வார்கள் என்றும், அவ்வாறு செய்தல் நல்லதல்ல என்று



கூறுபவர்களும் உண்டு. வடிவம் பெறப் பார்த்திருக்கும் இயற்கையின் ஆற்றல் இத்தகைய வடிவங்களில் அதனதன் தன்மையில் வெளிப்படும். வீடுகளில் கூட இன்னன் இன்ன பெருட்களை, படங்களை வீட்டில் வைக்க

24 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.







சேவியர் (தமிழ்நாடு)

நடுப்பக்கம்

# நீங்க நல்லவரா? கெட்டவரா?



'எல்லாரும் ஒண்ணு தான்' என நாம் பொதுவாக சொல்கின்ற வாக்கியம் எவ்வளவு பெரிய அபத்தம் என்பதை சற்று உற்று நோக்கினால் உணரலாம். எல்லோருக்கும் இரண்டு கைகளும், இரண்டு கால்களும், உடலமைப்பும் இருக்கிறது என்பதற்காக எல்லோரும் ஒண்ணு தான் என சொல்ல முடியுமா ? ஒரே போல இருக்கிறார்கள் என குறைந்த பட்சம் இரண்டு பேரையாவது காட்ட முடியுமா ? இல்லை என அடித்துச் சொல்கிறது அறிவியல். ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். ஒருவருடைய கைரேகை போல இன்னொருவருடைய கைரேகை இருப்பதில்லை. இன்றல்ல, ஆதிகாலம் முதல் முடிவு காலம் வரை தேடினாலும் அப்படி ஒரு சாத்தியம் இல்லை என்கின்றனர். தம்மாத்துண்டு கட்டை விரலில் இருக்கின்ற ரேகைகளிலேயே கோடானு கோடி வித்தியாசங்களை வைத்திருக்கிறார் இறைவன்.

ஒருவருடைய விழிப்படலத்தைப் போல இன்னொருவருக்கு இருப்பதில்லை, ஒருவருடைய நரம்பு மண்டலத்தைப் போல இன்னொருவருக்கு இருப்பதில்லை. இதனால் தான் அறிவியல் தனி மனித அடையாளங்களுக்காக இவற்றையெல்லாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

'உலகத்துல ஒரே மாதிரி ஏழு பேரு இருப்பாங்க' என சொல்வார்கள் இல்லையா? அந்த ஏழு பேருக்கும் கூட இவையெல்லாம் தனித்தனி தான். ஏன், இரட்டையர்களின் நிலமையும் இது தான். எல்லாமே தனித்துவம், ஒவ்வொருவருமே ஒரு ரகம்.

இப்படி தனித் தனியே இருக்கின்ற மனிதர்களின் எண்ணங்கள், சிந்தனைகள், நோக்கங்கள், இயல்புகள் எல்லாமே தனித்தனியே தான் இருக்கின்றன. ஒருவருடைய சிந்தனை ஓட்டம் இன்னொருவருக்கு இருப்பதில்லை. ஒரே



நோக்கத்தில் ஓடுபவர்களுக்குக் கூட அவர்களின் பயணங்களில் ஏகப்பட்ட வித்தியாசங்கள் இருக்கின்றன.

அதனால் தான் ஒவ்வொருவரும் கைகளில் வைத்திருக்கும் அளவு கோலும் தனித்துவமாகவே இருக்கிறது. ஒருவருடைய பார்வையில் சரி என தெரிபவை, இன்னொருவர் பார்வையில் தவறாய்த் தெரிகிறது. அந்த அளவுகோல் எப்படி ஒவ்வொருவருக்கும் தனித் தனியே அமைந்து விடுகிறது?

அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம்.

முதலாவதாக, தான் வாழ்ந்த வாழ்க்கைச் சூழல். குறிப்பாக சிறு வயதில் நாம் கற்றுக் கொண்ட பாடங்கள், பெற்றுக் கொண்ட விழுமியங்கள் எல்லாமே நமது அடி மனதில் ஆழப் பதிந்து விடும். பசுமரத்தாணி போல பதிந்த அந்த மதிப்பீடுகள் நம் கரங்களில் ஒரு அளவு கோலைத் தருகிறது. நல்ல மனித நேயம் மிகுந்த பெற்றோரின் பிள்ளைகளின் கைகளில் அன்பின் அளவு கோல் இருக்கும். சிறு வயதிலேயே நிராகரிப்பையும், புறக்கணிப்பையும், வெறுப்பையும் கண்டு வளர்ந்தவர்கள் கைகளில் வெறுப்பின் அளவுகோல் இருக்கும். அந்த அளவுகோலைக் கொண்டே அவன் தான் சந்திக்கும் ஒவ்வொருவரையும் அளவிடுகிறான்.

இரண்டாவது. நாம் சேர்த்துக் கொண்ட நண்பர்கள் நமக்குள்

17 ஆம் பக்கம் பார்க்க...





# நீங்க நல்லவரா? கெட்டவரா?

ஒரு அளவுகோலை உருவாக்குவார்கள். உன் நண்பர்களைக் கொண்டே உன்னை அளவிடலாம் என்பார்கள் இல்லையா ? நாம் அதிக நேரம் செலவிடும் நண்பர்களின் இயல்புகள் நம்முடைய இயல்பாக மாறிப் போய்விடுகிறது. நண்பர்களைப் போல நமது சிந்தனைகளும் செயல்களும் உருமாறுகின்றன. அத்தகைய நட்பு நமது கைகளில் ஒரு அளவுகோலைத் தந்து விடுகிறது ! அந்த அளவுகோலைக் கொண்டே நாம் பிறரை அளவிடுகிறோம்.

மூன்றாவது, நாம் கற்கின்ற பாடங்கள், நமது கல்வி, நாம் வாசிக்கும் நூல்கள் போன்றவையெல்லாம் நமக்குள் ஒரு கட்டமைப்பை உருவாக்கித் தருகிறது. வாசிப்பவையெல்லாம் சிறப்பான நூல்களாக இருக்கும்போது நமது சிந்தனையின் அடித்தளமும் தூய்மையானதாக இருக்கிறது. இப்படி நாம் கற்றுக் கொண்ட விஷயங்களெல்லாம் நம் கைகளில் ஒரு அளவுகோலைத் தருகிறது. அந்த அளவுகோலைக் கொண்டு நாம் பிறரை அளவிட முயல்கிறோம்.



நான்காவது, நமது ஆன்மிக சிந்தனைகள். ஆன்மிக ஈடுபாடுகள். ஆன்மிக செயல்பாடுகள். அவை உண்மையான பக்தியாக, இறை அன்பாக இருக்கும்போது நம்மிடமிருந்து இறை அன்பு வெளிப்படுகிறது. அவை வெறும் மதத்தின் சாயலாக இருக்கும் போது வெறுப்பும் வன்மமும் நம்மிடம் படிந்து விடுகிறது. சிறப்பான ஆன்மிக சிந்தனையுடையவர்கள் கைகளில் இருக்கின்ற அளவுகோல் மனிதத்தில் நனைத்திருக்கும். மதத்தின் வெறிகொண்டவர்கள் கைகளில் இருக்கும் அளவுகோல் மனித இரத்தத்தில் நனைந்திருக்கும்.

இப்படி அளவுகோல்களும் பல வகைகளாக இருக்கின்றன. நம்முடைய தோல்விகள், நமது அவமானங்கள், நமது வெற்றிகள், நமது அனுவல், நமது எதிரிகள், நமது குடும்பம் போன்றவை கூட நமக்கான அளவுகோலை நிர்ணயிக்க முடியும்.

ஒவ்வொருவர் கையிலும் இப்படிப்பட்ட ஏதோ ஒரு அளவு கோல் இருக்கிறது. அவையெல்லாம் வேறு வேறு சூழல்களால் உருவாக்கப்பட்டவையாக இருக்கின்றன. அதனால் தான் அந்த அளவுகோல்களும் தனித்துவம் உடையதாகவே இருக்கின்றன. அந்த அளவுகோல் ஒருவனை நல்லவன் எனும் போது, இன்னொருவனின் அளவுகோல் அவனை தீயவன் என்கிறது!

கொலைகாரனின் கையிலுக்கும் அளவுகோல் ஒரு வன்முறையாளனை வெற்றியாளன் எனக் கொண்டாடும். மிதவாதியின் கையிலுக்கும் அளவுகோல் ஒரு சாமான்யனை நல்லவன் எனக் கொண்டாடும். படிப்பாளியின் கையிலிருக்கும் அளவுகோல் ஒரு அறிவாளியை அரவணைக்கும், படிக்காதவன் கையிலிருக்கும் அளவுகோல் ஒரு எளிமையானவனை அங்கீகரிக்கும்.

இப்படி நம் கைகளில் இருக்கும் கண்ணாடிக்கு ஏற்ப நாம் பிரதிபலிக்கிறோம். அதனால் தான் ஒரே நபர் எல்லோருக்கும் நல்லவராகவோ, எல்லோருக்கும் கெட்டவராகவோ இருக்க முடிவதில்லை.

அப்படியானால் எப்படி எல்லோருக்கும் நல்லவனாய் வாழ்வது ? சுருக்கமாகச் சொல்லவேண்டுமெனில் 'அது தேவையில்லை' என்று தான் சொல்லவேண்டும். பிறருக்கு நல்லவனாய் இருப்பதை விட தன்னளவில் ஒவ்வொருவரும் நல்லவனாய் இருந்தால் போதும். நல்லவன் எனும் போது மனித நேயம் மிகுந்தவனாக, தாழ்மை உடையவனாக, பணிவு உடையவனாக, மரியாதை தெரிந்தவனாக, பண்பாளனாக என்றெல்லாம் நாம் பட்டியலை நீட்ட முடியும். அதற்கு தடையாக நமது அளவுகோல் இருந்தால் முதலில் அதை சரி செய்ய வேண்டும்.

எல்லோருக்கும் நல்லவனாய் இருக்க வேண்டுமென போராடினால் நாம் வெற்றி பெற முடியவே முடியாது. காரணம் எல்லோரிடமும் வேறு வேறு வினாத்தாள்கள் இருக்கின்றன. நமது விடைகள் எல்லோருக்கும் பொருந்துவதில்லை. ஆனால், ஆங்கிலத் தேர்வுக்கு கணித விடைத்தாள்கள் இல்லாத அளவுக்கேனும் விழிப்பாய் இருக்க வேண்டும். அதாவது, குறைந்த பட்சம் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கேனும் நாம் நேர்மை உடையவராக இருக்க வேண்டும்.

நல்லவனாய் இருப்பதன் முதல் படி, தீயவனாய் இல்லாமல் இருப்பது தான். ஒரு வகையில் நம்மிடமிருக்கின்ற குணாதிசயங்களில் எதெல்லாம் தீயது, எதெல்லாம் பிறரைக் காயப்படுத்தக் கூடியது என்பதைப் புரிந்து கொண்டு விலக்கினாலே படிப்படியாக நம்மிடம் தீமைகள் விடைபெற்று விடும். அதன் பின் நமது செயல்கள் சீர் செய்யப்பட்டு விடும். அழுக்கடைந்த பாத்திரத்தில் அமுதத்தை ஊற்ற முடியாது. கறைகளைக் கழுவியபின் நிறைகள் வந்து சேரும்.

எல்லோரும் ஒண்ணு தான் என்பது, ஏற்றத்தாழ்வற்ற சமூகம் எனும் சிந்தனை அடிப்படையில் சரியானது. அதே நேரம் ஒவ்வொருவரும் தனித் தனி என்பதே இயல்புகளின் அடிப்படையில் சரியானது. இந்த தனித்துவமான வாழ்க்கையில் நமது பயணத்தைச் சீர்செய்வோம். நமது நோக்கம் நாம் நல்லவர்கள் என பிறர் அளிக்கும் சான்றல்ல. நாம் நல்லவர்கள் என நம் மனசாட்சி தருகின்ற கையொப்பம். ■

# எங்கே பிடுங்கிய கீரை!



இங்கே சுன்னாகம் மருதனார் மடச் சந்தையில் வாங்கிய கீரைப்பிடியைப் பார்த்தீர்களா? எவ்வளவு பசுமையான கீரை. நம்ம ஊர் ஊர்தான்! என எண்ணினால் தவறு.

முயற்சி உடையார் எந்தநாட்டில் வாழ்ந்தாலும், முடிந்த வரை வெற்றி காண்பார்கள். தாய் மண்ணில் வீட்டு வளவுக்குள் நிலம் இருந்தும், நிலம் எங்கும் கல்லுப்பதித்து, வேலி எங்கும் சீமைக்கிழுவை , மரம் தறித்து, தகரவேலியும் மதிலும் கட்டி, காற்று வேண்டாம் ஏசி போதும் என இருக்கும் ஒரிசிலர் மத்தியில்.

**யேர்மனியில் சங்கீதபூசணம்**

திருமதி கலைவாணி ஏகானந்தராஜா தம்பதிகள், வசிக்கும், வீட்டில் சிறு பால்கனியில் இந்தக் கீரையை இன்று அறுவடை செய்துள்ளனர். (16. 06.2023)

அவர்கள் முயற்சிக்கும், தாயகம் செல்லும் போது எல்லாம் தம்மால் ஆன உதவிகளை மக்களுக்கு செய்யும் மாண்புக்கும், வெற்றிமணி பத்திரிகை அவர்களை வாழ்த்தி, மகிழ்கின்றது.

பசுமைப் புரட்சி தொடரட்டும் ■




# வெற்றிமணி திருமண சேவை

நன்கு படித்த, Master முடித்த யேர்மனியில் Bonn நகரில் வேலை செய்யும் 1993 ஆம் ஆண்டு பிறந்த சைவ வேளாளர் பெண்ணுக்கு (உயரம் 171 cm) சிறந்த மணமகன் தேவை Nordrhein-Westfalen மாநிலத்தில் உள்ளவர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
அமரன் 01731833664



மணமகன் தேவை!

யேர்மனியில் கற்றிங்கன் நகரில் ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம் உள்ள சைவ, வேளாளர் 28 வயது நிரம்பிய பெண்ணுக்கு, ஏற்ற பட்டதாரி மணமகன் தேவை. தற்போதைய பாடசாலையிலேயே தொழிலைத் தொடரக்கூடிய தூரத்தில் வரனை எதிர்பார்க்கிறோம்.
பெற்றோர் தொடர்பு கொள்ளவும்.
4915774318528

Wirtschaftsingenieur ஆக Frankfurt நகரில் வேலை செய்யும் 34 வயதுடைய சைவ வேளாளர் பெண்ணுக்கு தற்போதைய இடத்தில் வேலை தொடரக்கூடிய பட்டதாரி மணமகனை எதிர்பாக்கின்றோம்.
பெற்றோர் தொடர்பு கொள்ளவும்: 4915774318528

இரா.சம்பந்தன் (கனடா)



# இராவணனின் பிள்ளைப் பாசம்!

மகனே கள நிலவரம் எப்படி இருக்கின்றது. ஒன்றையும் எனக்கு மறைக்காமல் சொல் என்று மகன் இந்திரசித்திடம் கேட்டான் இராவணன். அப்பா உன்னால் வீரமாக வளர்க்கப்பட்டவன் நான். என்னிடம் வலிமை மிக்க சிவனின் ஆயுதங்கள் இருக்கின்றன. அவற்றைப் பாவித்தும் கூட ஒன்றும் செய்ய முடியவில்லை.

உண்மை இது தான். இதுவரை செத்துப் போனவர்கள் போகட்டும். மீதமுள்ளவர்களையும் எங்களையும் நாம் காப்பாற்றிக் கொள்வோம். சீதையை விட்டுவிடு. இதை அவர்களுக்க நான் பயந்து சொல்ல வில்லை. உன்மீது எனக்கு இருக்கும் அன்பினாலே சொல்கிறேன் என்றான் இந்திரசித்து.

> **ஆதலால் அஞ்சினேன் என்று**
> **அருளலை ஆசைதான் அச்**
> **சீதைபால் விடுதி ஆயின் அனையவர்**
> **சீற்றம் தீர்வர்**
> **போதலும் புரிவர் செய்த தீமையும்**
> **பொறுப்பர் உன்மேல்**
> **காதலால் உரைத்தேன் என்றான் உலகு**
> **எலாம் கலக்கி வென்றான்.**
>
> **(இராமாயணம் - யுத்த காணடம் - இந்திரசித்து வதைப்படலம்)**

இராவணனுக்கு கோபம் வந்து விட்டது. போரிலே செத்துப் போனவர்கள் எல்லாம் இந்தப் போரை வென்று தருவார்கள் என்று நம்பியோ இன்னும் போராட நிற்பவர்கள் கூட வெற்றி பெற்றுத் திரும்புவார்கள் என்று நினைத்தோ நீ இருக்கின்றாய் அவர்களை வென்று வருவாய் என்று கருதியோ நான் இந்தப் போரைத் தொடங்கவில்லை. என் வீரத்தை நம்பித் தான் இந்தப் பகையை ஏற்றுக் கொண்டேன். நீ போ. நான் பார்த்துக் கொள்கின்றேன் என்றான் இராவணன்.

> **முன்னையோர் இறந்தார் எல்லாம்**
> **இப்பகை முடிப்பர் என்றும்,**
> **பின்னையோர் நின்றோர் எல்லாம்**
> **வென்றனர் பெயர்வர் என்றும்,**
> **உன்னை நீ அவரை வென்று தருதி**
> **என்று உணர்ந்தும் அன்றால்**
> **என்னையே நோக்கி யான் இந்த**
> **நெடும்பகை தேடிக் கொண்டேன்.**
>
> **(இராமாயணம் - யுத்த காணடம் - இந்திரசித்து வதைப்படலம்)**

இல்லை அப்பா நீ வீட்டிலே இரு. நான் சண்டைக்குப் போகின்றேன் என்று சொல்லிக் களத்துக்குப் போன இந்திரசித்துக் கடுமையாகப் போராடி இறுதியில் இறந்தும் போனான். மகன் இறந்துவிட்டான் என்ற தகவல் கிடைத்ததும் துடித்துப் போனான் இராவணன்.

போர்க் களத்துக்கு வந்து தலை அறுக்கப்பட்ட மகனின் உடலைக் கட்டிப்பிடித்துக் கதறினான். மகனே உன் அப்பன் வீரனடா. இந்திரன் உலகத்தை போரிலே கைப்பற்றியவனடா. எதையெல்லாம் செய்து முடிக்க வேண்டும் என்று மனம் எண்ணியதோ அதையெல்லாம் தடையின்றி வீரத்தினாலே முடித்துக் கொண்ட உன் அப்பன் ஒரு பெண்ணிலே ஆசைப்பட்டு அதன் காரணமாக உன்னைப் பறிகொடுத்துவிட்டு நிற்கின்றேனே.

எனக்கு நீ செய்ய வேண் டிய இறுதிக் கடன்களை எல்லாம் ஏங்கி ஏங்கி உனக்கு நான் செய்ய வேண்டியதாகப் போய்விட்டதே. என்னைவிட பாக்கியசாலிகள் உலகத்தில் வேறு யார் இருக்கின்றார்கள் என்று அழுதான் இராவணன்.

> **சினத்தொடும் கொற்றம் முற்றி**
> **இந்திரன் செல்வம் மேவி**
> **நினைத்தது முடித்து நின்றேன்**
> **நேரிழை ஒருத்தி நீரால்**
> **எனக்கு நீ செய்யத் தக்க கடன்**
> **எலாம் ஏங்கி ஏங்கி**
> **உனக்கு நான் செய்வது ஆனேன்**
> **என்னின் யார் உலகத்து உள்ளார்.**
>
> **(இராமாயணம் - யுத்த காணடம் - இந்திரசித்து வதைப்படலம்)**

தம்பிமார்கள் மனைவி மந்திரிகள் என்று யார் கெஞ்சியும் சீதையை சிறை விடாத இராவணன் மகன் இறந்த போது தான் முதன் முதலாக ஒரு பெண்ணுக்காக உன்னை இழந்துவிட்டேன் மகனே என்று வெளிப்படையாக சொல்லி அழுதான்.

---

# 3000 ஆண்டுகளுக்கு முன் இறந்தவரின் முகத்தை தொழில் நுட்பத்தால் கண்டுகொள்ள முடிந்தது!



உலக தொல்லியல் அகழாய்வுகளில் சிறப்பிடம் பெறுகின்ற அகழாய்வுகளில் ஒன்று எகிப்தின் இளம் ஃபாரோ தூத்தான்காமூனின் ஈமச்சடங்கு கல்லறையும் மம்மியும். தங்க முலாம்பூசப்பட்ட பெட்டியில் தங்கத்தாலான ஏராளமான பரிசுப்பொருட்களுடனும் தேருடனும் தங்கத்தால் போர்த்தப்பட்ட முகமூடியுடன் மம்மியாக்கப்பட்ட தூத்தான்காமூனின் உடல் கண்டுபிடிக்கப்பட்டபோது இறந்த சமயத்தில் அவனது முகத்தோற்றம் எவ்வாறு இருந்திருக்கும் எனத் தெரியாமல் இருந்தது. ஆனால் இப்போது தொழில்நுட்பம் அம்முகத்தை அடையாளம் காண வாய்ப்பைத் தந்துள்ளது. இந்த புகைப்படத்தில் உள்ள 3டி வடிவம் கி.மு 1323 காலவாக்கில் இறந்து போன தூத்தான்காமூனின் முகத்தைக் காட்டுகிறது. பேரரசன் அக்னதோன் மறைந்த பின்னர் அவனது மகன் 9 வயதே நிரம்பிய தூத்தான்காமுன் மன்னராக முடிசூட்டப்பட்டான். ஆனால்



அவனும் ஆட்சிக்கு வந்த 10 ஆண்டுகளில் இறந்து போனான். அவனது மம்மியின் மீதுமேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அவனது இறப்பு ஒரு கொலையாகவும் இருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகவும் உள்ளது .

கம்பியூட்டர் டோமோக்ராஃபி வழி தூத்தான்காமூனின் முகப்பகுதி ஸ்கேன் செய்யப்பட்டு க்ராஃபிக்ஸ் மென்பொருள் தொழில்நுட்பம் வழி தூத்தான்சாமூனின் முகம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டுகள் பல கடந்தாலும் இறந்தவர் முகங்களை அடையாளம் காண தொழில்நுட்பம் இன்று வாய்ப்பளிக்கின்றது.

**நன்றி:** https://www.archaeology.org/news/11492-230608-tutankhamun-facial-approximation

சுபா (யேர்மனி)









# நீரிழிவு

## பலரை ஆட்டிப்படைக்கும் கோடிய நண்பன்

“காப்பி குடிக்கின்றீர்களா?“ என்று யாராவது உங்களிடம்கேட்டால், தொடர்ந்து “சீனி போடலாமா?“ என்கின்ற கேள்வியையும் அவர்கள் எப்போதுமே சேர்த்துத் தான் கேட்பார்கள். அதற்குக் காரணம் வேறு ஒன்றுமே இல்லை, சீனி வியாதி, சுகர் நோய், னயைடிநவநள என்று எல்லாம் செல்லமாகப் பலரால் அழைக்கப்படும் இந்த நீரிழிவு நோயால், புவியில் வாழும் பல மக்கள் அவதிப்படுகின்றனர். இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றிக் கண்டிப்பாக உங்களுக்குத் தெரிந்திருக்கும். அவர்கள் தினமும் இன்சுலின் எடுத்துக்கொள்வதைப் பார்த்திருப்பீர்கள். இப்படி எங்குப் பார்த்தாலும் காணக்கூடிய இந்த நீரிழிவு நோய் உண்மையில் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா?

பொதுவாக நீரிழிவு நோயைப் பற்றிப் பேசும் போது, எல்லோருமே இன்சுலின் என்பதைப் பற்றியும் பேசுவார்கள். ஆனால், பலருக்கு இன்சுலின் என்றாலே என்ன என்பது தெரிவதில்லை. இன்சுலின் எனப்படும் இயக்குநீர் (ஹார்மோன், hormone) உடலிலுள்ள குளூக்கோஸின் அளவைக் கட்டுப்படுத்தும் வேலையைச் செய்கிறது. குளுக்கோஸ் நமது உடலுக்குத் தேவையான சக்தியை வழங்கக்கூடிய பொருட்களில் ஒன்று. இதிலுள்ள சர்க்கரையளவைச் சரியாகக் கட்டுக்குள் வைக்க முடியாமல் போகும் போது தான், உடலில் நீரிழிவு நோய் ஏற்படுகிறது. இன்சுலின் சரியாக உடலுக்குக் கிடைக்காமல் இருந்தால், இந்நோய் ஏற்படும். அத்துடன் உடலின் சர்க்கரையளவை அதிகரித்துப் பெரும் பிரச்சினைகளைக் கொண்டுவரும்.



Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

நீரிழிவு நோயினை முற்றிலும் புரிந்துகொள்வதற்கு முதலில் குளுக்கோஸைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். குளுக்கோஸ், சர்க்கரையை மூலப்பொருளாகக் கொண்ட ஒரு பொருள். இது தான் உடலிலுள்ள செல்கள் அனைத் திற்கும் சக்தியை வழங்கக்கூடியது. செல்கள் இரத்தத்திலிருந்து குளுக்கோஸை எடுத்துக்கொண்டு, அதனை ஆற்றலாக மாற்றும். அது மட்டுமில்லாமல் மூளையின் செல்கள் மற்றும் செங்குருதியணுக்கள் போன்றவை குளுக்கோஸில் இருந்து கிடைக்கும் ஆற்றலை மட்டுமே பிரதானமாகக் கொண்டு இயங்குகின்றன. இந்தக் குளுக்கோஸ் நாம் சாப்பிடும் உணவுப்பொருட்களில் இருந்து இரத்தத்திற்கு வருகிறது.



நாம் சாப்பிடும்போது குடலின் மூலம் குளுக்கோஸ் உறிஞ்சப்பட்டு, இரத்த ஓட்டத்தின் மூலம் உடலின் அனைத்து பாகங்களுக்கும் செலுத்தப்படுகிறது. ஒரு வேளை உங்கள் உடலில் அதிகப்படியாக குளுக்கோஸ் உருவாக்கப்பட்டிருந்தால், மீதமுள்ள குளுக்கோஸ் கல்லீரல் மற்றும் தசைப்பகுதிகளில் ‘கிளைக்கோஜன்‘ என்கிற நீண்ட குளுக்கோஸ் சங்கிலியாகச் சேமித்து வைக்கப்படும். குளுக்கோஸ் உடலில் குறைவாக இருக்கும்போது சேமித்து வைத்திருந்த இந்த இடங்களில் இருந்து குளுக்கோஸினைப் பயன்படுத்திக்கொள்ளும் மற்றும் உங்களைச் சாப்பிடும்படியும் தூண்டும். இரத்தத்தின் குளுக்கோஸ் அளவினை நிலையாக வைத்திருக்கக் கணையம் இருவிதமான ஹார்மோன்களை உருவாக்கிறது. அவைதான் இன்சுலின் மற்றும் குளுக்கோகான். இன்சுலின், நாம் உணவு உட்கொண்டு முடித்தவுடன் குளுக்கோஸ், கொழுப்பு அமிலங்கள் மற்றும் அமினோ அமிலங்கள் பயன்படுவதைக் குறைத்து ஊட்டச் சத்துக்களைச் சேமிக்கிறது.

நீங்கள் சாப்பிடாவிட்டால் என்னாகும்? நீங்கள் சாப்பிடாமல் விரதம் இருக்கும் போது, உங்களின் கணையம் குளுக்கோகான் என்பதை வெளிப்படுத்தும், இந்த குளுக்கோகான் குளுக்கோஸை உருவாக்கும். குளுக்கோகான் ஒரு புரத ஹார்மோன், இது கணையத்தின் தீவுக் கூட்டங்களில் உள்ள ஆல்பா செல்களால் உருவாக்கப்படும். எப்படியிருந்தாலும் இவையிரண்டுமே முடிந்தவரை குளுக்கோஸைப் பெற்று உடலில் உள்ள அனைத்து செல்களுக்கும் வழங்குகிறது. இவை இல்லையெனில், உங்களின் உடலில் குளுக்கோஸின் அளவு வெகுவாகக் குறைந்துவிடும்.

சரி இது இருக்கட்டும், ஆனால் இந்த குளுக்கோகான் அல்லது குளுக்கோஸ் என்ற இரண்டில் எதை, எப்போது சுரக்க வேண்டும் என்பது நமது உடலுக்கு எப்படித் தெரியும்? எப்போதுமே குளுக்கோஸ் மற்றும் குளுக்கோகானின் அளவுகள் எதிரெதிர் சமநிலையில் இரத்தத்தில் இருக்கும். இன்சுலினின் அளவு இரத்தத்தில் அதிகரிக்கும்போது உணவிலிருந்து கிடைக்கும் குளுக்கோஸ், அமினோ அமிலங்கள் மற்றும் கொழுப்பு அமிலங்களை உறிஞ்ச ஆரம்பிக்கும். இதனால் நிலையான அளவில் இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு கட்டுப்படுத்தப்படும்.

சரி நண்பர்களே, உங்களுக்கு இப்போது உடல் எப்படி குளுக்கோகான் மற்றும் குளுக்கோஸ் ஆகியவற்றைப் பயன்படுத்துகிறது என்பது தெளிவாகப் புரிந்திருக்கும். எனவே, இப்போது நீங்கள் நீரிழிவினைப் பற்றித் தெரிந்துகொள்ளத் தயாராகிவிட்டீர்கள். நீரிழிவில் மூன்று வகைகள் உள்ளன. அவை வகை 1, வகை 2 மற்றும் கர்ப்பகால நீரிழிவு ஆகும். இன்சுலின் குறைப்பாட்டினால் ஏற்படும் நீரிழிவு, வகை 1 ஐச் சேர்ந்தது. பரம்பரை நோயாகக் கருதப்படும் இவ்வகை நீரிழிவு, இன்சுலின் குறைப்பாட்டினால் ஏற்படுகிறது. நீரிழிவு நோயாளிகளில் 90% முதல் 95% வரை வகை

27 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2023 ஆம் ஆண்டின் அதி உன்னத புத்தம் புது டிசைன்கள் எமது கையிருப்பில்



பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்

திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

காலம் என்பது மகா கெட்டிக்காரன். அதனால், ஆக்கவும் முடியும், அடக்கி வைக்கவும் முடியும், அழிக்கவும் முடியும் என்பது கண்கூடு. அடக்கி வைத்த கொரொனாவும், ஆக்கி வைக்கும் புதிய கண்டுபிடிப்புக்களும் பிரபலங்களும், அழித்துவிட்டுப் போன உயிர்களும் எமக்கு அத்தாட்சிகளாகின்றன. எத்தனையோ மனிதர்கள் வாழ்க்கையிலே காலம் கரைத்து விட்டுப் போன ஆசைகளும் முயற்சிகளும் ஏராளம். ஆழக்கடலுள் புதைந்து போன பொக்கிசம் போல மனக்கடலுள் புதைந்து கிடக்கின்ற ஆசைகளும், கவலைகளும், உண்மைகளும் அதிகம். அந்த ஆசைகள் மனதுக்குள் கறையான் அரிப்பது போல் மெல்ல மெல்ல உடலையும் உள்ளத்தையும் அழித்துவிட்டுப் போகின்றன. எந்தவொரு செயலுக்கும் கவலைக்கும் காலம் பதில் சொல்லும் என்பார்கள். காரணம் ஓடிக் கொண்டே இருக்கும் காலம் பலருடைய ஆசைகளையும் வண்டில் வண்டிலாய் ஏற்றிக் கொண்டுதான் போகின்றது.

நேற்று இருந்தவர்கள் இன்று இல்லை. இன்று இருப்பவர்கள் நாளை இல்லை. ஆனாலும் காலம் வாழாதிருக்கவில்லை. புதிய புதிய கண்டுபிடிப்புக்களையும் புதிய புதிய ஆசையுள்ள மனிதர்களையும் படைத்துக் கொண்டுதான் போகின்றது. அவர்களும் ஆசைகளை வளர்த்து மாண்டுதான் போகின்றார்கள். சாதித்துவிட வேண்டும் என்று துடிப்பவர்களும் எண்ணங்களால் கோட்டை கட்டி அழித்து விட்டுப் போனவர்களையும் காலம் சுமந்துதான் வந்தது. சிறுகதைகளின் தொடக்கப்புள்ளியையும் புதுக்கவிதைகளின் தொடக்கப் புள்ளியையும் காட்டிவிட்டு போன பாரதியாரைப் போல எழுத்துலக மேதைகளின் உத்திகளும் திறமைகளும் முடிக்க முடியாது முடிந்து போகப் புதிய வரவுகள் அதைப் பிடித்துத் தொங்கிய படி பயணத்தைத் தொடங்குகின்றன.

இந்தப் பயணத்தில் நாம் கண்டதும் எம் பெற்றோர் கையாளாததும் எம்முடைய இளமைக் காலத்தின் ஏக்கங்களுக்கும் ஆசைகளுக்கும் துணை வராததுமான கணணியை 1834 ஆம் ஆண்டு சார்ள்ஸ் பாபேஜ்(charles Babage) கண்டுபிடித்த போது தொழில்நுட்ப வளர்ச்சியின் பல கனவுகளுடன் காலத்துடன் கரைந்து போனார். ஆனால் இன்று அப்பிள் நிறுவனம் 5.6.2023 வெளியிட்ட விசன் புரோ (vision Pro) உருவாக்கத்தில் இருந்த இடத்தில் இருந்தபடி கண்ணாடியை மாட்டி 3டி யிலே சமுகவலைத்தளங்களுடன் தொடர்பை அருகாமையிலே கொண்டு வந்து நிறுத்துகின்றது. 23 மில்லியன் பிக்சல் 4ம தரத்தில் கமெராக்களைக் கொண்டு தெளிவாக பார்க்கலாம். Magic



# இலக்கியத்தில் இவர்கள்...

35

கௌசி (யேர்மனி)



## எந்தவொரு செயலுக்கும் கவலைக்கும் காலம் பதில் சொல்லும்!

Keyboard வரும். அதனைப் பயன்படுத்தி எல்லை தாண்டியிருக்கும் உறவுகளுடன் அருகில் இருந்து பேசலாம். எம்மைச் சுற்றி பனோராமா படங்களைப் பார்க்கலாம். இவ்வாறு ஏராளமான வசதிகளைக் கொண்டு வந்து காட்டியுள்ளது. இந்த உருவாக்கங்கள் காலத்தின் போக்கையும் மனங்களில் மாற்றங்களையும் கொண்டு வந்து காலப்பந்தயத்தை விரைவாக மாற்றுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இதேபோன்று தொலைபேசி கை அடக்கத்தினுள் இருக்கும் போது சாதித்துக் காட்டுகின்ற சாதனைகள் ஏராளம். பலவிதமான App கள் பிரமிக்க வைக்கும் வசதிகளைத் தந்திருக்கின்றது. இவ்வாறு காலமானது இன்று எம்மிடம் கொண்டு வந்து நிறுத்தியுள்ள சாதனை என்னவென்றால்,

> **"இதனை இதனால் இவன்முடிக்கும்**
> **என்றாய்ந்து**
> **அதனை அவன்கண் விடல்"**

என்ற வள்ளுவர் குறளைப் பொய்ப்பிக்கும் வண்ணம். இதனை இதனால் இவன் முடிப்பான் என்று ஆராயாமலே உன்னால் முடியும் உன்னால் முடியும் தோழா என எல்லோராலும் எல்லாம் முடிகின்ற காலமாகக் கொண்டு வந்து நிறுத்தி, அக்காலமானது நதிபோல ஓடிக்கொண்டிருக்கின்றது. இவர்களாலேயே முடியும் என்ற செயலை மாற்றி இன்று யாரும் எதையும் செய்து முடிக்கலாம். யூரியூப் இருந்தால் போதும் கவிஞன் ஆகலாம், சமையல் வல்லவன் ஆகலாம், புகைப்படக் கலைஞன் ஆகலாம், வரைபடக் கலைஞன் ஆகலாம். அது மட்டுமல்லாமல் யாருக்கும் யாரும் அறிவுரை கூற வேண்டிய அவசியமும் இல்லை. எல்லோரும் வைத்தியர்கள் எல்லோரும் மேதாவிகள் என்ற ஒரு காலத்தை இன்று கண்முன்னே காலம் கொண்டு வந்து நிறுத்தியுள்ளது.

ஷஷபெரியோரை வியத்தலும் இலமே சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே." என்று கணியன் பூங்குன்றனார் எழுதியது போல யாருக்கும் யாரும் சளைத்தவர்கள் இல்லை.



> **"வான்குருவியின் கூடு வல்லரக்குத்**
> **தொல்கரையான்**
> **தேன்சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால் –**
> **யாம்பெரிதும்**
> **வல்லோமே என்று வலிமைசொல**
> **வேண்டாம் காண்**
> **எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது"**

என்று ஔவையார் தூக்கணாங் குருவியின் கூடு, கரையான் புற்று, தேனியின் கூடு, சிலந்தியின் வலை என ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சிறப்பு இருக்கின்றது என்னும் பாடலையும் காலம் மாற்றிவிட்டது. எல்லோருக்கும் ஒவ்வொன்று எளிது என்பது எல்லோருக்கும் எல்லாம் எளிது என்றாகி விட்டது. இப்போது தரம் பற்றி யாருமே சிந்திப்பதில்லை.

காலம் தந்துவிட்டுப் போன காயங்களும் வலிகளும் ஆழ்மனப் புதையலுக்குள் கிடந்தாலும் மனிதம் வாழ்வதனால் பிறர் மனச் சிந்தனைகளை சீர்தூக்கிப் பார்ப்பதனால், காலத்தை வென்று வாழ தலைப்படுகின்றனர்.

> **"உடன்பிறந்தார் சுற்றத்தார்**
> **என்றிருக்க வேண்டா**
> **உடன்பிறந்தே கொல்லும் வியாதி –**
> **உடன்பிறவா**
> **மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்**
> **அம்மருந்து போல்வாரு முண்டு"**

என்று வலிகளுக்கு மருந்தாக பிற வழிகளைக் காலம் கண்டுபிடித்துக் கொடுக்க அதைப்பற்றித் தொடருகின்ற வாழ்க்கையானது கால நீரோட்டத்தில் சேர்ந்து ஓடிக் கொண்டிருக்கின்றது. அஞ்சலோட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கும். ஓட்டப்பந்தயத்தில் ஈடுபடுபவர்கள் கையில் கொண்டு செல்லும் கோலைத் தொடர்ந்து ஓடுபவர்களுடைய கையிலே கொடுத்துவிட்டுக் காணாமல் போய்விடுவார்கள்.






# கூத்தப்பெரியோனின் அமுத விழா








கூத்தப் பெரியோன் பேராசிரியர் சி.மௌனகுருவைப் பாராட்டிக் கௌரவிக்கும் அமுதவிழா கடந்த மாதம் வெள்ளிக் கிழமை (09-06.2023) மட்டக்களப்பு கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார முன்னாள் பீடாதிபதி பாலசுகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில்,அமுத உரையினை நிகழ்த்திய யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்த பேராசிரியர்.அ. சண்முகதாஸ் அவர்கள் தனக்கும் பேராசிரியர் மௌனகுருவுக்கும், இடையிலான தொடர்பு,மௌனகுரு எவ்வாறு கூத்துக் கலையின் நாயனாக பரிணமித்தார் என்பதை பற்றியும் ஓர் சிறப்பான உரை நிகழ்த்தினார். அமுதம் பகிரும் உரையினை பேராசிரியர் சி.மௌனகுரு நிகழ்த்தினார்.

தாயதி பதிப்பகத்தால் பதிப்பிக்கப்பட்டு அமுத



விழாவில் வெளியீடு செய்யப்பட்ட "இராவணேசன் - அரங்காடியோர் அனுபவங்கள்" நூலின் முதல் பிரதியினை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப் புரவலர் விநாயகமூர்த்தி றஞ்சிதமூர்த்தி அவர்கள் பெற்றுக் கொண்டார். நூல் அறிமுகவுரையினை மகுடம் சஞ்சிகை ஆசிரியர் மகுடம் வி.மைக்கல் கொலின் அவர்கள் நிகழ்த்தினார்.

இந் நிகழ்வில்சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. க.மோகனதாசன் தயாரிப்பில் கூத்து வடிவத்தை உள்வாங்கி

சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக மாணவர்களை கொண்டு தயாரிக்கப்பட்ட வரவேற்பு நடனம் கூத்தப்பெரியோனின் புகழ்பாடியது மிகச் சிறப்பு.

பேராசிரியர் பாலசுகுமாரின் கிழக்கிசை பாடல்கள் மற்றும் பேராசிரியர் சி.மௌனகுருவும் மாலினி



பரராஜசிங்கமும் இணைந்து வழங்கிய "அடங்க மறுத்தவள் ஆடும் கூத்து" புதிய பல தளங்களை திறந்து விட்டது.

கலாநிதி சு.சிவரெத்தினம் அவர்களின் நன்றியுரையுடன் இனிதே நிறைவு பெற்ற நிகழ்வின் இறுதியில் அமுதவிழா நாயகன் பேராசிரியர் சி.மௌனகுரு பல்வேறு பிரமுகர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவப்படுத்தப்பட்டார்.














# அனிருத்துக்கு அலை அலையாய் யேர்மனியில் கூடிய மக்கள்!

தென்னிந்திய திரைப்பட இசையமைப்பாளர், பாடகர் அனிருத்தின் இசை நிகழ்ச்சி யேர்மனியில் ஒபகவுசன் நகரில் மிகப்பிரமாண்டமான Rudolf Weber Arena மண்டபத்தில் 10.06.2023 சனிக்கிழமை இடம் பெற்றது, ஐரோப்பாவில் நடைபெற்ற அனிருத்தின் நிகழ்ச்சிகளில் இதுவே மிகப் பிரமாண்டம் எனக் கருதப்படுகின்றது.

நுழைவாயில் Ticket யாவும் ஒரே நாளில் விற்பனை செய்து சாதனை படைத்தது.

அரங்க அமைப்பு மிகவும் அற்புதமாகவும், பணத்தின் அடிப்படையில் தர வரிசை இருந்தாலும், சாதரண வரிசைக்கும் அதிக வேறுபாடு வராவண்ணம், மேடை அமைப்புகள் இருந்தவை மேலும் சிறப்பு. மக்களை தன்னோடு நிகழ்ச்சி முடியும் வரை ஈர்த்து வைத்திருக்கும் கலை படைத்தவர் இளைஞன் அனிருத்.

12.000 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள், பல நாடுகளிலும் இருந்தும் வருகை தந்து இருந்தனர்.

இந்த மாபெரும் நிகழ்ச்சியை AJ Entertainments : Arun Jesuthasan Ordin Thanapalasingham.

(tamil. De.) இணைந்து பல இளைஞர்களின் ஒத்துழைப்புடன் இதுவரை



இப்படி ஒரு நிகழ்ச்சி நடக்கவில்லை என எண்ணும் வண்ணம் நடத்தி முடித்தனர்.

பெரியவர்கள் இளையவர்கள் திறமை கண்டு பெருமிதம் கொள்ளலாம். காரணம் தேவர் மகனில் சிவாஜி சொல்லும் கமலின் வசனம் 'விதை நாம் போட்டது'.

முன்பு எல்லாம் பல ஆயிரக்கணக்கில் இளையவர்கள் கூடினால் அங்கு கைக்கலப்புகள் வரும், என பெற்றோர் அஞ்சுவர்.

ஆனால் இன்று ஆண்கள் பெண்கள் என்று எல்லோரும், மங்கல் ஒளியிலும், எந்தச் சீர்கேடும் இன்றி ஆடி மகிழ்ந்தார்கள். இது எமது சந்ததியின் ஒரு ஆரோக்கியமான நல்ல நகர்வு எனக்கருதலாம். சிறு சிறு தவறுகள் இருக்கலாம். அவை பெரிதுபடுத்தி ஊதி இளையவர்கள் உற்சாகத்தை குறைக்காது, அமைதியாக இவர்களுக்கு எடுத்து சொல்லாம். அவர்களும் முன்புபோல் அல்ல. பிழை, சரி அறிந்து தம்மை மாற்றுக்கொள்ளும் பண்புடன் வளர்ந்து உள்ளார்கள்.

ஈழத்தவர்கள் நிகழ்ச்சி, படைப்புகள் இவற்றை விட்டு, இந்தியர்களை அழைத்து வீண் செலவு செய்கிறார்கள் என்ற வழமையான பேச்சுக்களை விட்டு. எமக்கு தேவை என்றால் இளைஞர்களை அணுகுங்கள்.

கொரோனா மக்களை மக்களுடன் சேராது கட்டிப்போட்டது. கட்ட விழ்த்தபின்னும், கட்டி இருந்ததே பழகிப்போய் போனோடும், சூமோடும் சும்மாய் இருந்துவிட்டார்கள். விதிவிலக்காக சில இருக்கலாம்.

எனவே மனித சக்தியை, உயிர் உள்ள உறவுகளை நேரில் காண்பது என்பது அரியதொரு நிகழ்வு.

பலரது வீடுகளில் 10 வருடம் கிழியாத செற்றிகளே 2 வருடம் கொரோனா காலத்தில் கிழிந்து போனது. வீட்டுக்கு வெளியே வேலையை தவிர வேறு ஒன்றும் இல்லாது பழகிப் போனது.

நல் ஆடைகள் உடுத்தி, விரும்பிய உணவு உண்டு, உல்லாசமாக எங்கள் பிள்ளைகள் இருப்பது ஆனந்தமே. அன்று ஊரில் நாம் ஆடாத ஆட்டமா.

இவ்வளவு காசுக்கு தாயகத்தில் இவ்வளவு செய்யலாம், செய்யலாம் என்று எதனையும் அனுபவிக்காது , இருப்பதும், நல்லதல்ல, நாமும் வாழ்ந்து, பிறரையும் வாழவிடுவோம், வாழவைப்போம்! என்றால் அது சரி.

நம் இளையவர்கள், பெரு விருட்சமானால், நிழல் எமக்கும் உண்டு என நம்புவோம். நம்பிக்கைதான் வாழ்க்கை.

'சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஒய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"
Aadaa Finance GmbH
Dr. (h.c) Nageswaran Arulrasa D.Litt (CEO)
Eidgenössische finanzmarktaufsicht Nr.35302
Fachmann Für Versicherung & Vorsorge
Hauptstrasse 54, 6015 Luzern, Switzerland

aaDaa Finance 0798000100

079 8000 100 | arulnages@yahoo.com
finma : 34598 cicero : 25605

மங்கல இசைக்குழு
உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட
தவில் மேதை அளவையூர்
குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச் செல்வன்


N.K.Raguraman
Dresdener Str.6 50126 Bergheim Germany
Tel: 0049 157 89 15 95 71
0049 2271 670236 | 0049 160 91146240



# பேரண்ட ஆற்றலின் அலையை கையாள்வது எப்படி



15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

கூடாது வெளியே வீசிவிடுங்கள், இவற்றை வையுங்கள் என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டிருப்போம். உடமைகள் யாவும் சக்திநிலையில் தொடர்பை உண்டாக்கி பதில் கர்மவினையை ஏற்படுத்தும் என்பதனால் யோகிகள் பொருள் உலகில் எதனையும் தம்மோடு வைத்துக் கொள்வதில்லை.

மிக அதீத சக்தியை வெளிப்படுத்தும் பொருட்கள், வடிவங்களும் உண்டு. உதாரணமாக சாளக்கிராமம் எனப்படும் கல் ஒரு நத்தை படிமக்கல் ஆகும். இது உருவாக பல இலட்சம் வருடங்கள் ஆகும். இதன் உட்பகுதியில் ஒரு சுருள் வடிவம் உண்டு. இதன் வடிவம் பால்வெளியை ஒத்திருக்கும். இயல்பாகவே கருங்கல்லிற்கு ஈர்ப்பு சக்தி அதிகம். இந்த வடிவத்தோடு கூடியமையால் அதீத சக்தியை அது இயற்கையிலிருந்து உள்வாங்கி அதே சுருள் அதிர்வலையோடு வீரியமாக வெளியிடுகிறது. இதன் ஆற்றலில் சிறிதளவேனும் சங்குகளுக்கும் உண்டு. உயிருள்ள சங்குகள் உணர்வோடு நிரம்பியுள்ளதனால் அவை இறந்தபின் அந்த சுழலில் ஆற்றல் இறங்குகின்றது. எனினும் சாளக்கிராம கல்லின் அளவிற்கு அல்ல. இவ்வாறே ஈர்ப்பு சக்தி அதிகம் வாய்ந்த கற்களின் வகைகள் அதிகம் இன்று ஆற்றல்சமநிலை சிகிச்சைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. காந்தமுனை ஊசி முதற்கொண்டு இடிதாங்கி வரை எத்தனையோ சக்தி ஆற்றுகைக்கு இவ்வாறான பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு அதிக சக்தியை வெளிவிடும் பொருட்களை மிக மிக பத்திரமாக கையாளுதல் வேண்டும். ஏனெனில் அத்தகைய பொருட்கள் தம் சூழலில் பெரும் சக்தியை ஊட்டும். உதாரணமாக இவ்வாறான பொருட்களின் நெருக்கத்தில் என்ன மனநிலையோடு அதிர்வலைகளை வெளிப்படுத்துகின்றோமோ அந்த அதிர்வலைகளை இவை மேலும் வீரியமாக்கி நடைமுறைக்கு கொண்டு வந்துவிடும். பக்குவமில்லாத ஒரு மனிதர் எவ்வகையான பழியுணர்ச்சி, பகை, மனக்கவலை, விரக்தி, பயம் போன்ற எதிர்மறை அதிர்வுகளை எண்ணங்கள் மூலம் வெளிப்படுத்தக்கூடும். அவை வாழ்வில் எப்படிப்பட்ட ஆபத்துக்களை வரவழைக்கக் கூடும். எனவேதான் முற்காலத்திலிருந்தே பெரியவர்கள் வழிபாட்டு பொருட்களை கூட படிகத்தாலான லிங்கம் யோகியருக்கு, கல்லாலானது ஆலயத்துக்கு, மங்கல பொருட்கள் போன்ற மென்மையானவை வீட்டிற்கு, சாளக்கிராமம், சுயம்புருவம் போன்றவற்றை தூய்மையற்று, பக்குவமற்று கையாளக் கூடாது என்று பற்பல அறிவுரைகள் கூறினர். மனக்கவலை, குரோதம், பேராசை, பயம் போன்றவையே பெரும் துடக்காகும். இன்பதுன்ப மாயைகளை





கடந்த பக்குவப்பட்டவர்களால் தாம் வாழும் சூழலில் இத்தகைய பொருட்களை கவனமாக கையாள முடியும்.

சரி இத்தகைய பொருட்களில் விழும் சக்தி கூட ஏன் இந்தளவு அறிவுநிலை கொண்ட மனிதரில் விழுவதில்லை என்ற கேள்வி எழலாம். இயற்கையின் விதிகளில் தலையாயது என்ன? இடைவெளிகளை நிரப்புவது தானே. ஜடப்பொருட்கள் திணிவு கொண்டிருந்தாலும் அவற்றில் எண்ணங்களின் இடைவெளி உண்டு. மனிதருக்கு அப்படியல்ல. எப்படி ஏற்கனவே கழிவு நீரால் நிரப்பப்பட்ட பாத்திரத்தில் நன்னீரை நிரப்ப முடியாதோ. அப்படி அதனுள் நிரப்பினாலும் கூட அந்த நன்னீர் முழுமையான தூய தன்மை கொண்டிருக்காதோ. அது போன்றே மனித மனங்கள் எண்ணங்களின் குப்பைகளால் நிறைந்துள்ளன. உறங்கும் போதும் எண்ணங்கள் உரையாடிக்கொண்டே இருக்கின்றன. அதாவது வேலையில்லாமல் இருக்கும் பொழுதுதான் மனம் பொருந்தாத எண்ணங்களுக்கு இடம் கொடுத்து விடுகிறது. உயர்ந்த இலட்சியத்திலேயே எப்பொழுதும் அதை வைத்திருப்பது என்பது இயலாமல் போய் விடுகிறது. ஆனால் ஒன்றன் பின் ஒன்றாக உயர்ந்த நோக்கங்களிலேயே மனதை செலுத்திக் கொண்டே இருப்போமேயானால் அதற்கு கீழ்மையான எண்ணங்களை ஏற்றுக் கொள்ள அவகாசமில்லாமல் போய் விடும். எனவே கீழான எண்ணங்களில் கலந்து கொள்ளாமல் பாராமுகமாக இருப்பதும் அல்லது அவற்றை இலட்சியம் செய்யாமல் புறக்கணித்து விடுவதும், மேலான இலட்சியத்தில் நாட்டம் கொண்டு உறுதியாக நிற்பதும் மனதை வெல்லுவதற்கு உற்ற இரு உபாயங்களாகும். வைராக்கியம் என்பது இதுதான். தீவிரமாக தீமைகளைத் தள்ளி நன்மைகளை ஏற்றுக் கொள்ளுதல்.

இப்பேரண்ட ஆற்றலில் அளப்பரிய பொக்கிசங்கள் உள்ளன. அத்தகைய பொக்கிசங்களை தேர்வு செய்து ஈர்த்து எம்மை நிரப்ப வேண்டுமெனில் இருக்கின்ற எண்ணக் கழிவுகளை நீக்கி தியானம் மூலம் வெற்றிடத்தை ஏற்படுத்தி எது வேண்டுமோ அதனை எண்ணத்தில் அதிர்வை உண்டாக்க வேண்டும். இப்பேரண்டம் தாய்மையோடு இந்த இடைவெளியை நிரப்பி அத்தகைய அதிர்வோடு எம்மை உருவாக்கும். இதுவே யோகியர் நிலை. அதே போன்றே அதி தீயவர் நிலையும் அவ்வாறே இருள் சக்திகளால் நிரப்பப்படும்.

அன்றாடம் எம் உலகின் பலதரப்பட்ட சூழலில் நடைபெறும் நிகழ்வுகளில் போதைப்பாவனை, களவு, ஒழுக்கக்கேடு போன்ற தீய ஒழுக்கங்கள் இடம்பெறுகின்றன. ஆனால் எம் புலன்களுக்கு அகப்படாத இடங்களில் கூட இத்தகையவர்களுக்கு தேவையான இப்பொருட்களும், வாய்ப்புகளும் இலகுவில் அமைந்து விடும். எந்த மூலையில் இருந்தாலும் தகவல் இத்தகையவர்களை இலகுவில்



சென்றடையும் காரணம் இந்த இயற்கையின் சக்தியின் அதிர்வலை இவர்கள் எண்ணங்களின் அதிர்வலைக்கமைய செயற்பட்டுக்கொண்டு அவர்களை அதன் வழியில் இழுத்தும் செல்கிறது. ஆக எண்ணங்களால் அழைப்புக் கொடுக்கும் அத்தனை விடயங்களோடும் இயல்பாகவே தொடர்பு ஏற்பட்டுவிடும். எண்ணங்களின் அதிர்வின் வீரியத்துக்கு ஏற்ப இத்தொடர்பு இணக்கமாகவோ, தாமதமாகவோ இருக்கும்.

இதனிலிருந்து உணர்வது யாதெனில் எம்மோடு இருக்கும் ஒவ்வொரு விடயத்திலும், எமக்குள் இருக்கும் இருப்பு நிலையிலும், நாம் தொடர்புபடும் அத்தனை விடயங்களிலும், எண்ணங்களிலும் அவதானமும், விழிப்புணர்வும் மிகவும் அவசியம்.








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

## பேராசிரியர் சி.மௌனகுருவும் மாலினி பரராஜசிங்கமும் இணைந்து வழங்கிய "அடங்க மறுத்தவள் ஆடும் கூத்து" புதிய பல தளங்களை திறந்து விட்டது.

# அடங்க மறுத்தவள் ஆடும் கூத்து

ஆடடி காளி ஆடடி காளி
ஆடடி நின் கூத்தை

தரிகிட திமிதாம் தரிகிட திமிதாம்
தத்தரிகிட தோம் தோம் -தக
தகஜொணு தகதிமி தகஜொணு தகதிமி
தரிகிட திமிதக தோம்
தோம் தோம்
தரிகிட திமிதக தோம்

ஆடடி காளி ஆடடி காளி
ஆடடி நின் கூத்தை
அழகிய கால்கள் திசைதொறும் எறிந்து
ஆடடி உன் கூத்தை

சூலம் தாங்கி அரிவாள் ஏந்தி
கொடுமைகள் தலை அரிந்து
அபய கரத்தால் மக்களைக் காத்து
ஆடடி நின் கூத்தை

சுடலைச் சாம்பல் ஒளிரும் நெற்றியில்
முக்கண் தெரிகிறதே
கொடுமைகள் பொடிபட நீறென ஆக்கும்
பார்வை புரிகிறதே
தூக்கிய வலது கரமதில் சிவனின்
சூலம் அசைகிறதே
தாக்கி அநீதிகள் அழிக்க உனது
தாண்டவம் எழுகிறதே
ஊர்த்துவ தாண்டவம் பெண் ஆட முடியாது
என்றவர் யாரோடீ? உனது
இடது பதத்தை உயர்த்தி விஸ்வ
ரூபம் காட்டிடடி

மண்டைஓடுகள் கொங்கையில் ஆட
கொங்கை திரண்டாட









தாயகத்தில் கூத்தப் பெரியோன் பேராசிரியர் சி.மௌனகுருவைப் பாராட்டிக் கௌரவிக்கும் அமுதவிழாவில் இடம்பெற்றது. (09-06.2023)

அண்டம் அனைத்தும் அளந்து உனது
கேசம் விரிந்தாட

தண்டை ஒலிக்க கால்கள் எறிந்து
தக திமி தோம் எனவே
அண்டம் ஒடுங்க கண்டம் நடுங்க
ஆடடி உன் கூத்தை

வலதுபாத நுனி அழுத்திஎழும் உன்
தரிசனம் நான் பெற்றேன்
ஆயிரம் அர்த்தம் கூறும் அந்த
காட்சியில் எனை இழந்தேன்

கைகள் மறைக்கும் உன்
யோனியுள் இருந்து
குழந்தை வருகிறதே
படைப்பவள் நானே என்றவுன் திமிரை
எனக்கது தருகிறதே

அன்றிலிருந்து இன்று வரைக்கும்
அடங்க மறுத்தவள் நீ
அடங்க மறுத்தவள் ஆடும் கூத்துமோர்
ஆனந்தக் கூத்தே

அடக்கு முறைக்கு அடங்க மட்டோம்
அடங்க மறுப்போம் நாம்
இன்று உன்னில் இக்குணம் பெற்றோம்
என்ன கைமாறு செய்வோம்

ஆடடி காளி ஆடடி காளி
ஆடடி வேகமதாய்
அன்னை ஆடும் கூத்தை என் மனம்
நாடுது தாகமதாய்

தண்டை சிலம்பொடு கொங்கை குலுங்கிட
தாண்டவம் ஆடுகிறாள்
பெண்மையின் பேருரு காட்டி இயற்கை
அன்னை இங்காடுகிறாள் என்
அன்னை இங்காடுகிறாள்

தரிகிட திமிதாம் தரிகிட திமிதாம்
தத்தரிகிட தோம் தோம்
தகஜொணு தகதிமி தகஜொணு தகதிமி
தரிகிட திமிதக தோம்
தோம் தோம்
தரிகிட திமிதக தோம்

- சி.மௌனகுரு




வெற்றிமணி
வெளியீடு 28

# "வைகல்" நூல் வெளியீட்டு விழா!

## 23.09.2023 சனிக்கிழமை

அன்பிற்கினிய உறவுகளே!

வருகின்ற புரட்டாதி மாதம் 23ம் திகதி (23.09.2003) என்னுடைய எழுத்தில் "வைகல்" எனும் வாழ்க்கை வழிகாட்டி நூல் வெற்றிமணியின் 28வது வெளியீடாக வெளிவர இருப்பதனை மகிழ்வோடு அறியத்தருகின்றேன்.

சமூக அக்கறையோடு வாழ்வில் அன்றாடம் மிகமிகத் தேவைப்படுகின்ற அரிய விடயங்களை உள்ளடக்கிய பயன்தரு நூலாக அமைத்து இதனை எல்லோருடனும் பகிர்வதில் உளம் நிறைவடைகின்றேன்.

இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பிற்கவும், நேசத்தோடு கலந்துரையாடவும் அனைவரையும் உள்ளன்போடு அழைக்கின்றேன். இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு நிகழ்வை சிறப்பிற்கும் வண்ணம் வரவேற்று அனைவருடனும் உரையாடக் காத்திருக்கின்றேன்!



அன்புடன் கரிணி

**நேரம்:** மாலை. 4.00 மணி
**நிகழ்வு இடம்பெறும் இடம்:**
தமிழர் அரங்கம் (டோட்முண்ட்)
Rheinische Straße 76-80 | 44137 Dortmund





# பிராங்பேர்ட் தமிழ்க்கல்விக் கழகத்தின்
# தமிழ் நூலகம் நடத்தும் கதைசொல்லும் நேரம்!

தேன் மதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகைசெய்தல் வேண்டும் என்ற நோக்கத்தோடும் நாம் சிறுவர்களாய் இருக்கும்போது நாம் வாசித்தொகேட்ட கதைகளை புத்தகவடிவில் அவர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கத்தோடும் எம் பிள்ளைகளுக்காகொகன்னி முயற்சியாக பெற்றோர்களால் கடந்த அக்டோபர் மாதம் முதலாம் திகதி (01.10.2022) பிராங்பேர்ட் தமிழ்க் கல்விக் கழகத்தின்; கீழ் தமிழ் நூலகம் – ஆரம்பிக்கப்பட்டது.



ஐரோப்பிய நாடுகளை பொறுத்தமட்டில் நம் குழந்தைகள் வாழும் நாட்டில் உள்ள நூல்கள் மற்றும் ஆங்கிலமொழி பிரெஞ்சு மொழி என பிறமொழிகளை வாசிக்கின்றார்கள். ஆனால் தமிழ்மொழியை வாசிப்பதில் ஆர்வம்காட்டுவது மிக அரிதாகவே உள்ளது. அதற்காக நாம் ஒட்டுமொத்தமாக பிள்ளைகளை குறைசொல்லொஇயலாது மாறாக அதற்கான சூழலை அமைத்துக்கொடுப்பது பெற்றோர்களின் கடமையாகும். எனவே அவர்கள் தமிழ்புத்தகங்களை சாதாரனமாக நூலகங்களில் எடுத்துபடிக்க வைக்க வேண்டும் என்றநோக்கத்தோடு மட்டுமே நூலகம் அமையகாரணமாயிற்று. இந்த நூலகக்குழுவில் ஒன்பது பேர் அங்கத்தவர்களாக உள்ளனர். இக்குழுவில் செயற்படும் அனைவரின் பிள்ளைகளும் தமிழ்கல்விக்கழகத் தமிழாயத்தில் (பிராங்பேர்ட்) தழிழ் கல்வியைகற்கின்றமை சிறப்பம்சமாகும்.

நூல்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அவர்களின் கற்பனை வளத்தையும்; கைவேலைப்பாடு திறமையையும் ஊக்குவிக்கும் நோக்கில் நூலகத்தின் செயற்பாடுகளில் ஒன்றாக எம் குழுவினரால் – கதை சொல்லும் நேரம் – என்னும் தலைப்பில் மாதமொருறை பாலர்மழலையர்வளர்தமிழ் குழந்தைகளுக்கு கதைகள்சொல்லப்பட்டு அத்தோடு ஒரு கைவேலையும் செய்யபடுகின்றது.இந்நிகழ்வானது மாதமொருறை பெற்று வருகின்றமை குறிப்பிடதக்கதாகும். எமது நூலகத்தின் சேவையை ஒவ்வொரு சனிக்கிழமைகளும் காலை 10.00 மணி முதல் பகல் 12.00 மணிவரை (பாடசாலை விடுமுறை நாட்களைத் தவிர்த்து) புத்தகங்களை பெற்று நீங்களும் உங்கள் குழந்தைகளும் பயன்பெறலாம். ■

19 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நீரிழிவு



2 நீரிழிவால்தான் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் உடலில் உருவாகும் இன்சுலினை உடல் பயன்படுத்தாது. இது 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்படும், பெரும்பாலும் 50 முதல் 60 வயதுடையோர்களுக்கு இதன் பாதிப்புகள் ஏற்படும் வாய்ப்பு அதிகம். வகை 2 நீரிழிவு போலவே பாதிக்கும் கர்ப்பகால நீரிழிவு கர்ப்பமான பெண்களைப் பாதிக்கும். அதிகளவிலான இன்சுலின் மற்றும் பாதிக்கக்கூடிய அளவிலான குளுக்கோஸினால் இது ஏற்படுகிறது. கர்ப்பமாக இருக்கும்போது வேறுசில ஹார்மோன்கள் இன்சுலின் செயல்பாட்டினைக் குறைப்பதால் இந்தப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

நீரிழிவிற்கான நிரந்தர தீர்வு இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்றாலும், வகை 1 நீரிழிவிற்கு pancreatic islets மாற்றுவதன் மூலம் நிரந்தரமாகக் குணப்படுத்தலாம் என்று கண்டுபிடி க்கப்பட்டுள்ளது. இந்த முறையில் பாதிப்படைந்த பகுதியினை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக சிறு குழாயினை கல்லீரலில் செலுத்துவதன் மூலம் இதன் செயல்பாடு சரிசெய்யப்படுகிறது. இதனால் புதிதாக இன்சுலின் உருவாக்கம் மேம்படுத்தப்படுகிறது. இந்த முறையில் பிரச்சினைகள் இருந்தாலும், இது குறித்த ஆய்வுகள் இந்த சிகிச்சை முறையினை மேம்படுத்தி வருகின்றன.

நண்பர்களே, நாம் தற்போது விஞ்ஞான வளர்ச்சி அதிவேகத்தில் போகும் காலத்தில் வாழ்ந்து வருகிறோம். குறிப்பாகச் செயற்கை நுண்ணறிவு போன்ற அதிசய கண்டுபிடிப்புகளின் உதவியுடன் நாம் வெகு விரைவில் கொடூரமான நோய்களுக்கும் கூட சிகிச்சை முறைகளைக் காண்போம் என்பதில் எனக்கு எந்த விதச் சந்தேகமும் இல்லை. அதில் இந்த நீரிழிவு நோயும் ஒன்றாக இருக்கும். இருக்கும் என்று நம்புவோம்“ ■

## பாராளுமன்றும்

*ஊர்க்கோடி ஐயனாரின்*
*ஆடிப் பொங்கல் தீமிதியில்*
*எழுந்து வீசும் செஞ்சுவாலையென*
*சிவந்து கிடக்கிறது நட்சத்திர மதுக்*
*கடை,*
*அன்றலர்ந்த பிச்சியின் அந்தரங்க*
*வாடையோடு*
*அலங்கரித்துக் காத்திருக்கும் அதன்*
*நுழை வாயிலை நோக்கி*
*பூனைக்கல்களால் நடக்கிறேன்,*
*எப்பொழுதுமென் கண்களுக்கு*
*மட்டுமே*
*பரீட்சயமான*
*பிரத்தியோகத் தனியறையில்*
*வழியும் மதுக் குவளைகளை*
*ஒவ்வொன்றாய்*
*எண்ணிக்கொண்டிருக்கிறாய்,*
*புளிக்கும் திராட்சைகளும்*
*அத்திப்பழ வற்றலும்*
*இன்றைய இரவுக்கு*
*போதுமானது.*
*ஆனால்,*
*நாளைய அமர்வில்*
*உனக்கெதிராக நானும்*
*எனக்கெதிராக நீயும் கூச்சலிட்டு*
*கத்துவதற்கு*
*இன்னும் கொஞ்சம் திராட்சை*
*வற்றல்களையும்*
*இன்றைக்கு தின்று தீர்க்க*
*வேண்டியிருக்கிறது.* ■



சர்மிலா வினோதினி



09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இலங்கையில் தமிழ்...

எங்கே தான் செல்கிறது எமது கலாசாரம்? இப்பாதிப்பு எம் தமிழ் இனத்துக்கே சாபக்கேடாகி உள்ளது. எனைய முஸ்லீம், சிங்கள இன மக்களின் சில கட்டுகோப்பான சாம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள், ஒற்றுமை என்பன அவர்கள் இனத்தை பாதுகாத்து உள்ளது என்றே கூற வேண்டும்.

எந்த குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே.. அது நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே இது பழைய கதை. இன்று நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் செல்போன் பாவனையிலே இது புதிய கதை.

இன்று பிறக்கும் குழந்தைகள் செல்போன் உடனே பிறக்கின்றன. உணவுக்கு, உறவுக்கு, கல்விக்கு, தனிமைக்கு என அவர்களுக்கு செல்போன் தேவைபடுகிறது. இப்படியே காலப்போக்கில் தனிமையில் செல்போனுடன் அடைந்து கொள்கின்றனர். மனிதரை மறந்து உயிரில்லா ஒன்றுக்காக உயிரையே விடுகின்றனர். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். இன்று செல்போன் மட்டுமே இளைய சமூகத்திற்கு கண்கண்ட தெய்வம் ஆயிற்று. மேற்குறிப்பிட்ட மாவோ, ஐஸ், டொபி, சிகரெட், மதுபானம் என்பன ஒருவகை போதை என்றால் இவற்றை எல்லாம் சிறுவர்களுக்கு அறிமுகம் செய்யும் செல்போன் எனும் போதையை என்னவென்று சொல்வது.

முன்பெல்லாம் பாடசாலை மாணவர்களின் பைகள் சோதனைக்கு உட்படுத்த தேவை இருக்க வில்லை. ஆனால் தற்போது சில தரகர்கள் மற்றும் போதைப் பொருள் வியாபாரிகள் போதைப்பொருளை விநியோகிக்க மாணவர்கள்



பயன்படுத்தப்படுவதாக தெரிய வந்ததை அடுத்து நகர்ப்புற மற்றும் பிரதான பாடசாலைகளில் மாணவர்களின் பாடசாலை பைகளை பரிசோதிக்கும் முறைமையொன்று தயாரிக்கப்படும் என கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இம்முறைமை பாடசாலை மாணவர்களை வெகுவாக பாதிக்கவே கூடும்.

இவ்வாறு எம் சமூகம் ஒன்றை கடந்து இன்னொன்றை கடந்து அடுத்து அடுத்து புதிய புதிய போதைப் பொருளுக்கு அடிமையாகி கொண்டே செல்வதால் இளைய சமுதாயம் எப்படி எதிர்கால தலைமையை ஏற்க போகின்றது.

நாட்டுக்கு தேவையான வைத்தியர்கள், பொறியியலாளர், சட்டதரணி, ஆசிரியர்களை எங்கே தேடுவது? இப்படியே சென்று கொண்டிருந்தால் இப்போது நாடு எதிர்கொள்ளும் பொருளாதார சிக்கலை விட பன்மடங்கு பல்வேறு பிரச்சினைகளை நாடு எதிர்கொள்ள நேரிடும் என்பது கண்கூடு. படித்த சமுதாயம் ஒன்று உருவாக்கப்பட்டால் மட்டுமே எம் சமுதாயம் தலைநிமிரும். அன்றேல் இப்படி பல்வேறு போதைப் பொருள்களுக்கு அடிமையாகி நாட்டை, வீட்டை சீரழிக்கும் கூட்டம் தொடர்ந்து பெருகி சென்றால் சிறிது காலத்துக்குள் எம் தமிழ் இனம் தலை மறைவாகி போவது உறுதியே. ■

08 ஆம் பக்கம் பார்க்க...

## ரெட்டை கட்டிப் பறக்குதடீ

சைக்கிள் காத்துப் போய் இருக்கும். அக்கம் பக்கம் “பம்ப் “ கடன் வாங்கிக் கொண்டு வந்தாக் கைபிடி ஆடும், கிறீஸ் ஒழுகும் பத்துத் தரம் முக்கி முக்கி அடிச்சாலும் கொஞ்சமும் ஏறாது. ஆரோ சொன்னான் எண்டு அவசரத்திக்கு உதவும் எண்டு hand pump ஒண்டு வாங்கிக்க கொண்டு வந்து சீட்டுக்கு கீழ இருக்கிற டியச இல பூட்டி வைச்சன். ஆனாலும் ஒரு நாளும் ரயருக்கு காத்தடிக்க உதவேல்லை , கடைசீல நல்லூர் திருவிழாவில தான் தெரிஞ்சுது பலூனுக்கு காத்தடிக்கத்தான் அது பாவிக்கிறது எண்டு .

சைக்கிள் கடையில முந்தி இலவசமாக் காத்தடிச்சும் விட்டவங்கள். பிறகு காத்து அடிச்சுவிட மட்டும் காசு வாங்கி கடைசீல அடிச்சாலும் காசு அடிச்சு விட்டாலும் காசு எண்டு ஆகிச்சுது. டொக்டரிட்டை வருத்தம் எண்டு போறமாதிரித்தான் சைக்கிள் கடைக்குப் போறதும் . பிறேக் பிடிக்கேல்லை எண்டு போனால் நாலு சாமான் மாத்தி ரெண்டு சாமான் வாங்கிப் பூட்டினாப் பிறகு தான் விடுவினம். டொக்டர்மாரும் அப்பிடித்தான் இருமிக்கொண்டு போனவருக்கு இருமல் மருந்தோட இவ்வளவு நாளும் இல்லாத நாலு extra வருத்தத்தையும் கண்டுபிடிச்சு அதுக்கும் சேத்து மருந்து தருவினம்.

அப்பப்ப ஓடேக்க சைக்கிளில இருந்து விதம் விதமா எல்லாம் சத்தம் கேக்கும், இதுகும் இருமல் தடிமன் மாதிரித் தான் உடன ஓடிப் போய் கடையில காட்டத் தேவையில்லை. கை மருந்து மாதிரி செய்தால் சரி. Chain cover இல chain முட்டிற சத்தம் கேக்க காலால தட்டின தட்டுக்கு வகுப்பில மாஸ்டர் பிரம்பை உயத்த அடங்கிற சத்தம் மாதிரி இதுகும் நிக்கும் ஆனால் திருப்பியும் கொஞ்ச நேரத்தில கேக்கும். சைக்கிளில போய் எப்ப அடிபட்டாலும் இல்லாட்டி விழுந்தாலும் பேசினோன்ன மூஞ்சையை திருப்பிற மனிசி மாதிரி உயனெடந உடன திரும்பீடும். கால் ரெண்டுக்கும் நடுவில வைச்சு இழுத்து நிமித்தினால் சரி ( குறிப்பு மனசியை இல்லை) handle சரியாகீடும்.

ஒருக்காலும் சைக்கிள் துறப்பைத் துலைக்காதவன் இருக்க மாட்டான். சைக்கிள் கன பேரின்டை காதலுக்கு “ மாமா“ வேலை பாத்திருக்கு. ரியூசன் வழிய பொம்பிளைப் பிள்ளைகள் கதைக்கிறதுக்குச் சந்தர்ப்பம் சைக்கிளல வாறது , “காத்துப் போட்டு, செயின் கழண்டிட்டு, துறப்பைக் காணேல்லை “ எண்டு கேக்கிற பெட்டைகளுக்கு கேக்காமலே செய்யிறதுக்கெண்டே ஒரு உதவிப்படை திரியும் . இதையே டெக்னிக்கா பாவிச்சு மெல்ல மெல்ல லவ்வை develop பண்ணின கன பேர் இருக்கினம். உதவி கிடைக்காத நாங்கள் துறப்பைத் துலைச்சிட்டு பூட்டை உடைக்கத் தெரியாம தூக்கிக் கொண்டு சைக்கிள் கடைக்குப் போய் பூட்டை உடைச்சுட்டு பூட்ட வழியில்லாமல் நாய்ச்சங்கிலிக்கு புயவந ன்டை ஆமைப்பூட்டை கொண்டு போய் தூணோட சேத்துக் கட்டின நாளும் இருந்தது.

காலமை எழும்பி பால் வாங்க கடைக்குப் போகத் தொடங்கி , பள்ளிக்கூடம் , ரியூசன், விளையாட்டு , சரக்குச் சுழற்றிறது எண்டு ஊரைச் சுத்தீட்டு வீட்டை வந்து இரவில தலை கீழா கவிட்டு வைச்சு சைக்கிளை சுத்தி BBC , வெரித்தாஸ் , ஆகாசவாணி, லங்காபுவத் எல்லாம் கேட்டிட்டு கடைசீல உள்ளூர் செய்தியோட நித்திரைக்குப் போக அடிச்சுப் போட்ட மாதிரி ஒரு நித்திரை வரும் ஊர் உலகத்தை சுத்தின களைப்பால.

மனிசி திருப்பியும் “என்னப்பா ஏலாதே நான் சொன்னான் உங்களுக்கு வயசு போட்டு எண்டு“ என்டை இளமையை நக்கலடிக்கிறதைப் பொறுக்கேலாமல் “ஏறும் “ எண்டு சொல்லி ஏத்திக்கொண்டு உழக்க திருப்பியும் அதே ரொமான்ஸ் மூட் வந்திச்சுது ஆனாலும் கட்டினாப்பிறகு கூட வழமை போல மனிசி காணும் இறங்கிப்போறன் எண்டு சொல்ல திருப்பி வீட்டை வந்திட்டன். இரவு சைக்கிள் ஓடினதால கால் நோகுது எண்டு சொல்ல மனிசி காலை ஊண்டிவிட , செத்தும் கொடுத்த சீதாக்காதி மாதிரி ஓடினாப் பிறகும் ரொமான்ஸ்க்கு வழி செஞ்சுது சைக்கிள். ■

02 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பூந்திலட்டும், புத்தகங்களும்...

பங்குனி மாதம் பனங்கொட்டை, துளசிச் செடி கன்று, மாங்கன்று என பலவற்றை கொடுத்தோம். பனைமரம் வளர்க்கவும் நாம்தான் முதன்முதலில் கொடுத்தோம் என்றார். நான் அவரை இடைநிறுத்தி, நீங்கள் பிறப்பதற்கு முன்பே இலங்கையில் யாழ்ப்பாணத்தில், மில்க்வைற் சவர்க்கார தொழிற்சாலை அதிபர் அமரர் கனகராசா அவர்கள் இவ்வாறு கொடுத்து உள்ளார். மில்க்வைற் சோப் மேலுறைகளைக் கொடுத்து தென்னம்பிள்ளை, மாங்கன்று, பனங்கொட்டை, இப்படி பலவற்றை மக்கள் பெற்றுச் சென்றனர். என்ன இன்று போல் பெரிதாக மக்களிடம் சேர்க்க ஊடகமோ, யுரியூப் சனல்களோ அன்று இருக்கவில்லை. அன்றும் சமூக சேவைகள் சிறப்பாகவே நம் தாய்மண்ணில் நடந்தது என்றேன். புத்தகங்கள் வழங்குவது மிகவும் மகிழ்ச்சி! புகைப்படம் எடுக்கலாமா? என்றேன். தாராளமாக எடுங்கள், உங்கள் புத்தகங்களையும் எடுத்துச் செல்லுங்கள்!என்றார். எடுத்தேன், மகிழ்ந்தேன். விமானத்தில் வரும் போது சிலவற்றை படித்தேன். இல்லையெனில் அங்கு புத்தகம் எடுத்தவர்களில் நானும் ஒருவன் அவ்வளவுதான் என்றாகி இருப்பேன். நீங்கள் நம்புகின்றீர்களா? பொன்னியின் செல்வன் படம் வந்திரா விட்டால்.., கல்கியின் பொன்னியின் செல்வனை தேடித் தேடி படித்திருப்பீர்களா?, சரி படிக்காவிட்டாலும் ஒரளவு என்றாலும் அந்தக் கதை தெரிந்துதான் இருக்குமா?. புத்தகங்களை கையில் வைத்து வாசிக்கும் காலம் அருகி வருவதனால் புத்தகம் வாங்குபவர்கள் மற்றும் வாசிப்பவர்களைக் கண்டால் ஆச்சரியம் எழுகின்றது. ■







13 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஈழத்தின் நவீன தமிழ் கவிதைக்கு...

சேதிக்கு நாட்டிய வடிவம் கொடுக்க எண்ணி , மனதில் தோன்றிய இரு மஹா கவிகளின் வரிகளையும் வழைமை போல மஹாகவி சுப்ரமணிய பாரதியாரின் கொள்ளுப்பெயரன் டாக்டர் ராஜ்குமார் பாரதி ஐயாவிற்கு அனுப்பி வைத்தேன். சொல்ல வேண்டுமா ? இரு மஹாகவிகளும் அன்று உணர்ந்து உள்ளக்கனத்துடன் பாடியதை மெய்யுணர்ந்து இசை வடித்தார். கனத்தன நெஞ்சம். !

மஹாகவியை நான் அறிந்து கொண்டமை கூட ஒரு சுவையான அனுபவம். பள்ளிக்காலத்தில் ஒரு கவிதைப் போட்டிக்குச் சென்றேன். தலைப்புத் தருவார்கள் கவிதை எழுதிவிட்டு வர வேண்டும் என்று எண்ணினேன். ஆனால் அங்கு ஒரு வினாத்தாள் கொடுக்கப்பட்டு கவிதைப் பரீட்சை நடாத்தப்பட்டது. கவிதைப் போட்டிக்கு கூட வினாத்தாள் உருவாக்க முடியும் என்று அங்கு தான் முதன் முதலில் கண்டேன். அந்த 2 மணி நேரப் பரீட்சை முதல் சுற்றுக்கான தெரிவு மட்டுமே எனப் பின்பு அறிந்து வியந்தேன். அன்று ஏதோ படைப்பின் அருளால் முதல் மூன்று சுற்றுக்களிலும் தெரிவாகிய நிலையில் இறுதிச் சுற்றில் நடுவர்கள் சில வினா தொடுத்தார்கள். அவர்களுக்கு என்னுடன் அத்தனை பரீட்சயம் அன்று இருந்திருக்கவில்லை. மூன்று முது பெரும் அறிஞர்களிடையே மாட்டிக்கொண்ட உணர்வில் நின்றேன். ஆனால் அந்த அனுபவம் தான் கவிதைகள் மீதான என் தேடலையும், பார்வையையும் மாற்றியது. அங்கு கேட்கப்பட்ட ஒரு வினா 'மஹாகவி' பற்றி நீங்கள் அறிந்ததைச் சொல்லுங்கள்.? இவ்வினாவினைத் தொடுத்தவர் வேறு யாரும் அல்ல , நமக்கெல்லாம் தமிழ் தந்த பேராசான் கம்பவாரிதி ஜெயராஜ் ஐயா. ஆம் அந்த கவிதை போட்டி கம்பன் கழகத்தினரால் நடாத்தப்பட்டு இருந்தது. இலங்கை அளவெட்டியில் பிறந்த ஈழத்தின் நவீன தமிழ் கவிதைக்கு முன்னோடி மஹாகவி என்று அழைக்கப்படும் திரு உருத்திரமூர்த்தி என்று அறியத் தந்தார். அப்போட்டியில் வெற்றி பெற்றவர்களை கம்பன் மேடை கௌரவித்தது. அந்த மேடையில் என் வாழ்வின் தமிழ் பொறுப்பு உணர்ந்தேன். இன்று இரு தசாப்தங்களுக்குப் பின் ,இரு மஹாகவிகளையும் இணைத்து வழங்கும் இப்படைப்பினை பெருமதிப்பிற்குரிய கம்பவாரிதி ஜெயராஜ் ஐயாவிற்க்கே சமர்ப்பிக்கிறேன்.

தகரென்று கொட்டு முரசே பொய்மைச் சாதி வகுப்பினை எல்லாம்

ஒன்றென்று கொட்டு முரசே!-அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
அன்பென்று கொட்டு முரசே! – அதில்
யார்க்கும் விடுதலை உண்டு;
அன்பென்று கொட்டு முரசே !

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இரண்டாவது கல்லிலும்...

சுற்றி உள்ள தமிழர் நிலங்களையும் சேர்த்து பிக்குகளுக்கு வழங்கி புதிய விகாரைகளையும் அமைக்க வழி ஏற்படுத்திக் கொடுக்கிறது. இது அப்பட்டமான ஒரு ஆக்கிரமிப்பு. தொல்லியல் இடங்களாக அடையாளம் கண்டால் அவை மேலும் சிதைவடையாமல் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கலாமே தவிர, அங்கே புதிய கட்டுமானங்களை செய்ய முடியாது என்பது தொல்லியல் விதி.



அதேவேளையில், இங்கு புதிய கட்டுமானங்களை விகாரைகளை அமைப்பதற்குத் தேவையான நிதி தனிப்பட்டவர்களிடமிருந்தும், வெளிநாடுகளில் வசிக்கும் சிங்களவர்களிடமிருந்தும் தொல்லியல் திணைக்களத்துக்கு வழங்கப்படுகின்றது. இந்த நிலையில், அரச நிதியில் தங்கியிருக்காமல் தமது நிகழ்ச்சி நிரலின் படி செயற்படுவதற்கு தொல்லியல் திணைக்களம் முற்படுகின்றது. இதற்கான நிதி எவ்வளவு வருகின்றது. எப்படி வருகின்றது என்ற தகவல்கள் அரசாங்கத்திடம் இல்லை. இது தொடா்பாக ஜனாதிபதி ஒரு தடவை கேள்வி எழுப்பிய போது, பிக்குமார்தான் நிதியை சேகரித்து இந்த கட்டுமாணங்களுக்காக வழங்குவதாக தொல்பொருள் பணிப்பாளர் தெரிவித்திருந்தார்.

ரணிலைப் பொறுத்தவரையில் அவர் லிபரல் சிந்தனை கொண்ட ஒருவராகக் கருதப்படுபவர். அதேவேளையில் வரலாறு, பொருளாதாரம், அரசியல் விஞ்ஞானம் உட்பட பல விடயங்களில் தெளிவான அறிவைக்கொண்ட ஒருவர். அந்த நிலையில்தான் தொல்லியல் திணைக்கள பணிப்பாளருக்கு அவர் பாடம் புகட்ட முற்பட்டிருக்கின்றார். இந்த விடயத்திலும் ரணில் ஒரே கல்லியில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தியிருக்கின்றார்.

தன்னுடைய கட்டுப்பாட்டை மீறிச் செல்லும் தொல்பொருள் பணிப்பாளரை வெளியேறச் செய்திருக்கின்றார். இது அவரது முதலாவது மாங்காய். இனி அவா் தனக்கு சார்பான ஒருவரை பணிப்பாளராக நியமிப்பார். தற்போது தொல்பொருள் திணைக்களத்தின் மூலமான ஆக்கிரமிப்பு தொடர்பாக தமிழ்த் தரப்பு கடுமையாக குரல் கொடுத்து வருகின்றது. போராட்டங்களையும் முடுக்கிவிட்டுள்ளன. கஜேந்திரகுமார் கைது போன்றனவும் இந்தப் பின்னணியில்தான் இடம்பெற்றன. இது சர்வதேச அரங்கில் இலங்கைக்கு எதிரான பிரசாரங்களுக்கு பலத்தைக் கொடுத்துள்ளன. இந்த நிலையில், இந்த விவகாரத்தை ஓரளவுக்காவது சமப்படுத்த வேண்டிய தேவை – அல்லது நிர்ப்பந்தம் ரணிலுக்கு இருந்துள்ளது. அதற்காகத்தான் காணி ஆக்கிரமிப்புக்கு எதிராகவும், தமிழ்ப் பௌத்தம் குறித்தும் அவர் பேசியிருக்கின்றார்.

### இது அவரது இரண்டாவது மாங்காய்!

ஆனால், ரணில் ஒரு தனிநபர் அல்ல. அவர் பௌத்த சிங்கள கடுங்கோட்பாடுகளால் கட்டியமைக்கப்பட்ட அல்லது நிறுவன மயப்படுத்தப்பட்ட ஒரு அரசின் தலைவர். இந்த நிலையில் தற்போது அவர் சொல்லியுள்ள விடயங்களில் தொடா்ந்தும் உறுதிப்பாட்டுடன் இருப்பாரா என்ற கேள்வி உள்ளது. பல விடயங்களில் ரணில் தனது லிபரல் சிந்தனையை வெளிப்படுத்தியிருந்தாலும், பின்னர் பௌத்த – சிங்கள கடும் போக்காளா்கள் சீற்றமடையும் போது பம்மிக்கொண்டிருப்பது வழமையானதுதான். குறிப்பாக 13 குறித்து பேசிய அவர் இப்போது, இடைக்கால ஆலோசனைச் சபையை ஒரு தீர்வாக முன்வைக்க முற்படுவது அனைவருக்கும் தெரியும்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து ரணிலுக்கு எதிராக பிக்குமார்களும் இனவாத அமைப்புகளும் களத்தில் இறங்கத் தொடங்கி இருப்பதைக் காண முடிகிறது. குறிப்பாக உதய கம்பன்பிலவின் கட்சி உட்பட பல இனவாத அமைப்புக்களும், பௌத்த பிக்குகளும் ரணிலுக்கு எதிரான நகர்வுகளுக்கு இந்த விடயத்தை கைகளில் எடுத்துள்ளன. ஊடக சந்திப்புகள், கண்டன அறிக்கைகள் எல்லாம் ஏற்கெனவே வெளிவரத் தொடங்கிவிட்டன. சமூக வலைத்தளங்கள் எங்கும் சிங்களத்தில் ரணிலுக்கு கொடுத்து வரும் தாக்குதல்களும், பேச்சுக்களும் ரணில் மீது கடும் எதிர்ப்பலை தொடங்கப்பட்டுவிட்டதை உறுதிபடுத்துகின்றன. நாடாளுமன்றப் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் பொதுஜன பெரமுன இந்த விவகாரம் குறித்து தற்போதைய நிலையில் மௌனமாக இருந்தாலும், தருணம் வரும்போது இந்த விவகாரத்தைக் கைகளில் எடுக்கும். இந்தப் பின்னணியில் அடுத்த வருட முற்பகுதியில் ஜனாதிபதித் தோ்தலை எதிர்கொள்ளப்போகும் ரணில் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பாரா? அதற்கான துணிச்சல் அவருக்கு உள்ளதா? என்ற கேள்வி எழுகின்றது.

ரணிலைப் பொறுத்தவரையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரைக்கும் நிலைமைகள் சீர்குலையாமல் வைத்திருக்கவும், சர்வதேச உதவிகளைப் பெறுவதற்காகவும் இவ்வாறான சில காய் நகர்த்தல்களை முன்னெடுத்துக்கொண்டிருப்பார். அவற்றை நாம் சீரியஸாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை!





# நாவலப்பிட்டியில் எம்.ஜி.ஆர். பிறந்த வீடு நினைவுச் சின்னமாக மாறுமா?

தென்னிந்திய திரைத்துறையில் என்றுமே அசைக்க முடியாத நட்சத்திரமாக பிரகாசித்தவர், தமிழக அரசியலில் எவராலும் மறக்க முடியாத புரட்சி தலைவராக விளங்கும் எம்.ஜி.ஆர் என அன்பாக அழைக்கப்படும் எம்.ஜி.ராமசந்திரன் இலங்கையிலேயே பிறந்தார்.

இலங்கையின் மத்திய மலைநாட்டு பகுதியின் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள நாவலபிட்டி என்ற பிரதேசத்திலேயே, 1917 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி எம்.ஜி.ஆர் பிறந்தார்.

நாவலப்பிட்டி நகரிலிருந்து சுமார் 5 கி.மீ தொலைவில் அமைந்துள்ள கிராமமே கல்லாறு (இன்று கல்லோய என சிங்கள பெயரைக் கொண்டு அழைக்கப்படுகின்றது).

தேயிலை தொழிலைச் செய்யும் மக்களுக்காக ஆங்கிலேயர்களால் கல்லாறு பகுதியில் அமைத்துக் கொடுக்கப்பட்ட லயின் அறை ஒன்றிலேயே அவர் பிறந்துள்ளார்.

குழந்தைப்பருவத்தை எம்.ஜி.ஆர் நாவலப்பிட்டிபகுதியில் செலவிட்டதுடன், அதன் பின்னரான காலத்தில் கண்டி நகரில் வாழ்ந்துள்ளார்.

எம்.ஜி.ஆர் கல்லாறு பகுதியில் பிறந்தார் என்பதற்கு அவர் பிறந்ததாகக் கூறப்படும் வீடே தற்போது சாட்சியாக விளங்குகின்றது. தமது முன்னோர்களின் தகவலை அடிப்படையாக் கொண்டே, எம்.ஜி.ஆர் இந்தப் பகுதியில் வாழ்ந்ததை அந்தப் பிரதேச மக்கள் உறுதி செய்கின்றனர்.

தனது தந்தையின் இறப்பு, அதைத் தொடர்ந்து, தனது சகோதரன் மற்றும் சகோதரி ஆகியோரின் இறப்புக்கள், எம்.ஜி.ஆர் மீண்டும் தமிழகம் செல்வதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

நாவலப்பிட்டி பகுதியில் இருந்து தலவாகலை செல்லும் பிரதான வீதியில் சுமார் 5 கிமீ தூரம் வரை பயணித்தபோது, ஓர் இந்து ஆலயம் மற்றும் பாலம் ஒன்றுடன் அமைந்துள்ள கல்லாறு பகுதியை நாம் சென்றடைந்தோம்.

பிரதான வீதியிலேயே சுமார் 200 வருடங்கள் பழைமையான லயன் அறைகள் அமைக்கப்பட்டிருந்ததை எம்மால் அவதானிக்க முடிந்தது.

அந்த லயன் அறைகளில் இறுதியாக உள்ள வீடே, எம்.ஜி.ஆர் பிறந்த வீடாக நம்பப்படுகின்றது. வீட்டிற்கு அருகில் மிகவும் பழைமையான பலா மரமொன்றும், வீட்டின் பின்புறம் நீரோடை ஒன்றும் காணப்படுகின்றது.

வீட்டின் முன்புறம் திருத்த அமைக்கப்பட்டிருந்தாலும், வீட்டின் பின்புறம் அந்த வீடுகளின் பழைமையைக் கூறும் வகையில் உள்ளன. வீட்டின் பின்புறத்தில் ஓடும் நீரோடையில், மழைக் காலத்தில் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதால், அந்த வீட்டின் பின்புறம் முழுமையாகத் தாழிறங்கியுள்ளதைக் காண முடிந்தது. மிகவும் சிதைவடைந்து காணப்படும் இந்த வீட்டில் தற்போது முதியவர் ஒருவர் வாழ்ந்து வருகின்றார்.

தமிழக அரசியலில் இன்றளவும் தவிர்க்க முடியாத சக்தியாக விளங்கும் எம்.ஜி.ஆர் பிறந்த வீடு மற்றும் அவர் பிறந்த ஊர் இன்றும் எந்தவித அபிவிருத்திகளும் இன்றிக் காணப்படுகின்றன.

எம்ஜிஆர் சிறு வயதில் வணங்கிய ஆலயம் புனரமைக்கப்பட்டு வருவதைக் காண முடிந்தது. அதேபோன்று, எம்ஜிஆர் விளையாடியதாகக் கூறப்படும் மைதானத்தில், இன்று சிறுவர் இல்லம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, எம்ஜிஆர் பிறந்ததாகக் கூறப்படும் கல்லாறு பகுதியிலுள்ள சில வீடுகளில் எம்ஜிஆரின் புகைப்படங்கள் வைக்கப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது. எம்ஜிஆர் தொடர்பில் அந்த ஊரில் பிறந்த ரட்ணசபாபதி,பேசினார்.

எம்ஜிஆர் இங்கு பிறந்தார் என்பது பெரிய விடயம். இந்த மண்ணிற்குப் பெருமை. அவர் இங்கிருந்து கண்டிக்கு போய், கண்டியிலிருந்து இந்தியாவிற்கு போன பிறகு, அந்த நாட்டிற்குப் போனதால்தான் பெரிய புகழைப் பெற்றார்.

இங்கிருந்திருந்தால் கூட அந்த சந்



தர்ப்பம் கிடைத்திருக்காது. எம்ஜிஆர் பிறந்ததைப் பற்றி சொல்லப் போனால், அவரின் நிறைய படங்களைப் பார்த்திருக்கின்றோம்.

அவருடைய அனுபவங்கள், அவர் இருந்த காலகட்டத்தில் என்னென்ன செய்தார் என்பதை பாடல்கள், படங்கள் மூலமாக அறிந்திருக்கின்றோம். அவர் ஒரு சகாப்தம் என்று சொல்லலாம். அவர் கல்லாறு பகுதியில் பிறந்தார் என்பது எங்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கின்றது,' என அவர் கூறுகின்றார்.

எம்ஜிஆர் வாழ்ந்த வீடு, அன்று எப்படி இருந்ததோ, அதே போன்றுதான் இன்றும் இருக்கின்றது என ரட்ணசபாபதி கவலை தெரிவித்தார்.

அவர் வாழ்ந்த இந்த வீடு, அன்றைக்கு எப்படி இருந்ததோ, அந்தப் பழைமையைப் பராமரிக்கக்கூடிய அளவில் யாரும் இல்லை. இந்த லயின்கள் இடிந்து, உடைந்து மிக மோசமாக இருக்கின்றன.

லயின் அறைகளிலேயே எம்ஜிஆர் வசித்த வீடு மிகவும் மோசமாக இருக்கின்றது என அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இந்த வீடுகள் 200 வருடங்கள் பழைமையானவை. வீடுகளின் பின்னால் அடியில் ஊற்றுகள் உள்ளன. காலம் செல்லச் செல்ல மண் அரிப்பு ஏற்பட்டுள்ளது. எம்ஜிஆரின் வீடு அதைவிட மோசமாக உள்ளது.

நீர் அந்தக் கட்டடங்களில் பாய்வதால், சரிவுகள் ஏற்படுகின்றன. எம்ஜிஆர் இருந்த வீட்டில், அவர் மூலமாக ஏதாவது நடந்தால் மகிழ்ச்சி. அதை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்,' என அவர் கூறுகின்றார்.

இலங்கையில் எம்ஜிஆர் கண்டி நகரிலுள்ள வீடு ஒன்றில் வாழ்ந்ததாகக் கூறப்படுகின்ற போதிலும், அது உறுதி இல்லை என அந்த வீட்டின் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நிறைய பெண்கள், இந்த வீட்டு மண்ணை தொட்டுக் கும்பிட்டு, முத்தம் கொடுத்துவிட்டுப் போகிறார்கள். காரணம் என்னவென்றால், எம்ஜிஆர் தான் எங்களுக்கு தாலி செய்துகொடுத்தார் என்று சொல்கிறார்கள்.

இலங்கையில் எம்ஜிஆருக்கு நினைவிடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவிக்கின்றது.

இலங்கைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்த அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் உயர்மட்ட குழு, எம்ஜிஆர் பிறந்த வாழ்ந்ததாகக் கூறப்படும் இடங்களுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது.

அத்துடன், எம்ஜிஆரின் பெயரில் வீட்டுத் திட்டம், மணி மண்டபம் உள்ளிட்ட திட்டங்களும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.





# விஜய் சேதுபதி படத்தில் ராதிகா ஆப்தே

நடிகர் விஜய் சேதுபதி நடித்து கடைசியாக வெளிவந்த திரைப்படம் யாதும் ஊரே யாவரும் கேளிர். விமர்சனம் ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் தோல்வி படமாகியது. தற்போது இயக்குநர் ஆறுமுக குமார் இயக்கத்தில் புதிய படத்தில் நடிப்பதற்காக விஜய் சேதுபதி மலேசியா சென்றுள்ளார்.

மேலும் ஹிந்தியில் மெர்ரி கிறிஸ்துமஸ் என்ற படத்திலும் நடித்து வருகிறார். இதில் அவர் ஜோடியாக கத்ரினா கைப் நடிக்கிறார். ராதிகா சரத்குமார், சஞ்சய் கபூர், டினு ஆனந்த் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். இந்நிலையில் இந்தப் படத்தில் கபாலி படத்தில் நடித்த பொலிவுட் நடிகை ராதிகா ஆப்தே சிறப்பு தோற்றத்தில் நடிக்கிறார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.



# ஆகஸ்ட் 25 'இறைவன்' வருகிறான்

என்றென்றும் புன்னகை, மனிதன் போன்ற படங்களை இயக்கிய அஹமத் இயக்கத்தில் தயாராகி வரும் படம் இறைவன். தனி ஒருவன் படத்திற்கு பிறகு ஜெயம் ரவி, நயன்தாரா இணைந்து இப்படத்தில் நடிக்கின்றனர். யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். அதிரடி ஆக் ஷன் கலந்த திரில்லர் படமாக உருவாகி உள்ளது.

இந்த படம் ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என நான்கு மொழிகளில் வெளியாகுமென அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர்.

# கமலுக்கு வில்லனான எஸ்.ஜே.சூர்யா



ஷங்கர் இயக்கிவரும் இந்தியன் 2 திரைப் படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு தற்போது நடைபெற்ற வருகிறது. சித்தார்த், ரகுல் ப்ரீத் சிங், டெல்லி கணே ஷ், சமுத்திரகனி, குரு சோமசுந்தரம், விவேக், பிரியா பவானி ஷங்கர், காஜல் அகர்வால், பாபி சிம்ஹா ஆகியோர் நடித்து வருகிறார்கள்.

இந்த படத்தில் எஸ்.ஜே.சூர்யா வில்லனாக நடித்து வருவதாக கடந்த சில நாட்களாகவே தகவல்கள் வெளியாகி வந்தது. தற்போது அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கமலுடன் எஸ்.ஜே.சூர்யா படப்பிடிப்பு தளத்தில் இணைந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் வெளியாகியுள்ளது.



# கர்ப்பமாக இருப்பது ஆசீர்வாதம்

தமிழில் நண்பன் படத்தில் விஜய் ஜோடியாக நடித்துள்ள இலியானா, தெலுங்கு, இந்தி திரையுலகில் பிரபல நடிகையாக இருக்கிறார்.

இவர் சமீபத்தில் தான் கர்ப்பமாக இருப்பதாக அறிவித்தார். அவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. குழந்தைக்கு தந்தை யார் என்ற விவரத்தை வெளியிடவில்லை.

இந்த நிலையில் தற்போது அடையாளம் காணமுடியாத வகையில் காதலனுடன் இருக்கும் மங்கலான புகைப்படத்தை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் இலியானா பகிர்ந்துள்ளார். அதில் இலியானா வெளியிட்டுள்ள உருக்கமான பதிவில், 'கர்ப்பமாக இருப்பது ஆசீர்வாதம். இதை அனுபவிக்கும் நான் அதிர்ஷ்டசாலி. ஒரு குழந்தை தனக்குள் வளர்வது விளக்க முடியாத உணர்வு. அதிக நாட்கள் எனது வயிற்றை பார்த்தபடி உற்சாகம் கொள்கிறேன். குழந்தையை விரைவில் சந்திப்பேன். சில தினங்கள் இது கடினமான உணர்வாகவும் இருக்கிறது. சாதாரண விஷயங்களுக்கு அழக்கூடாது. தைரியமாக இருக்க வேண்டும்' என்று கூறியுள்ளார்.

# ரஜினியின் 170 இல் அமிதாப்



நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினிகாந்த் தற்போது ஜெயிலர் படத்தில் நடித்து முடித்து விட்டார். இதனை தொடர்ந்து ரஜினியின் 170 ஆவது படத்தை 'ஜெய் பீம்' பட இயக்குநர் டி.ஜே. ஞானவேல் இயக்கவுள்ளார்.

லைகா புரொடக்ஷன் தயாரிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இப்படத்திற்கு தற்காலிகமாக தலைவர் 170 என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த படத்தில் ரஜினி ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரியாக நடிக்கவுள்ளதாகவும், போலி என்கவுண்டர்களுக்கு எதிரான கதைக்களத்தில் உண்மை சம்பவங்களை அடிப்படையாக கொண்டு இப்படம் உருவாகவுள்ளதாகவும் கூறப்பட்டு வருகிறது. இந்நிலையில், இப்படத்தில் பொலிவுட் நடிகர் அமிதாப் பச்சன் இணையவுள்ளதாக கூறப்படுகிறது.

அதாவது, ரஜினிக்கு இணையான முக்கியமான கதாபாத்திரத்தில் நடிக்க பல நடிகர்களை தேர்வு செய்து வைத்த நிலையில் தற்போது இந்த கதாபாத்திரத்தில் அமிதாப் பச்சன் நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
அனைத்து சேலைகள், பஞ்சாபிகள், சேலைகளுக்கான பாதணிகள் யாவும் அதிரடி மலிவு விலையில்.
'என்றும் புதியது உங்கள் தெரிவுக்கு உகந்தது'
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen


Wuppertal நகரில்...
Asia Lebensmittel
மாதத்தில் முதல் வாரத்தில் புதன்கிழமை முதல் சனிக்கிழமை வரை மளிகைப்பொருட்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
மரக்கறி வகைகளுக்கும்
கடல் உணவு வகைகளுக்கும்
இன்றே நாடுங்கள்
+49 176 62728598 | 020289012114
Kaiserstraße 16, 42329 Wuppertal, Germany


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
SALE
Ludwig str.87a
70197
Stuttgart
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும் நவீன டிசைன்களில் அமைந்த சேலைகள் மற்றும் இமிற்றேசன் நகைகள் அனைத்திற்கும் நீண்ட கால நம்பிக்கை மிக்க ஸ்தாபனம் பிருந்தாஸ்
Stuttgart நகரில்...
சிறப்பு விலையில் அழகிய சேலைகள்
Tel: 0711 615 8976/ 0170 334 4059


RE/MAX
வீடு வாங்க விற்க
Buy & sell property
Sakthiya Nagaselvam Immobilienmaklerin IHK § 34c
உலகின் முன்னணி நிறுவனமான Remax அனுபவமிக்க முகவர் ஊடாக (Tamil, German, English) எளிய வழியில் உரையாடி உங்கள் கனவு இல்லத்தை நினைவாக்குங்கள்.
யேர்மனியில் வீடு விற்க விரும்புகின்றீர்களா?
வீடு வாங்க விரும்புகின்றீர்களா?
உங்கள் சொந்த வீட்டின் பெறுமதியை அறிந்து கொள்ள விரும்புகின்றீர்களா?
வீடு வாங்குவதற்குண்டான வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா?
மிக இலகு வழியில் வீட்டுக்கடன் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனையுடன் கூடிய அனைத்து வழிகளிலும் பெற்றுத்தரப்படும்.
மேலதிக விபரங்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
M: +49 176 32329957 | M: +49 52130515180 | E: sakthiya.nagaselvam@remax.de
IHRE IMMOBILIE VERKAUFEN?
World No1 Real Estate Agent
www.nagaselvam-remax.de


akr
VISUALIZERS
Photography
AHRVISUALIZERS
+ 49 162 803 1647
akrvisualizers
akrvisualizer@gmail.com
Asselner Hellweg 118 44319 Dortmund


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
அகம்
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698